விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 246 வள்ளுவர் ஆண்டு 2055 ஆவணி 05 புதன்கிழமை (21.08.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829







## ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா தலையிடாது

### திருவாய் மலர்ந்தார் இந்தியத் தூதுவர்



(கண்டி)

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகள் மறைமுகமாகக் காய்நகர்த்துவதாக பல தரப்பட்ட விமர்சனங்கள் எழுந்த நிலையில், இந்தியாவின் நட்பு இலங்கையருடனேயே, மக்களாணைக்கே இந்தியா 15

## அரகலயவின் பிரதான சூத்திரதாரி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

### பகிரங்கப்படுத்தினார் நாமல் எம்.பி



(கொழும்பு)

அரகலய போராட்டத்தில் ஈடுபட்ட பலர் தற்போது ஜனாதிபதி செயலகத்தில் பணிபுரிவதாகத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் போராட்டத்தின் ஸ்தாபகரே எனக் கூறியுள்ளார். 15



## பிரிந்தனர் பெரமுன எம்.பிக்கள்

# உதிர்ந்தது தாமரை மொட்டு

# மலர்ந்தது புதிய கட்சி

(கொழும்பு)

**ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களில் கணிசமானவர்கள் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்துள்ள நிலையில், அந்தக் கட்சி பிளவுபட்டுள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான புதிய அரசியல் கட்சியை உருவாக்குவது தொடர்பான விசேட கலந்துரையாடல் கொழும்பில் நேற்று இடம்பெற்றது.

புதிய கூட்டணியின் தலைவர் பதவியை பிரதமர் தினேஷ் குணவர்தனவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய கூட்டணியின் நிர்வாகிகள், நிர்வாக சபை மற்றும் பிற கட்சிகளின் நிர்வாகிகளை ஈடுபடுத்துவது குறித்து நீண்ட கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் நடைபெறும் எந்தவொரு தேர்தலுக்கும் 16

## தொலைக்காட்சி நிகழ்ச்சியில் திகாம்பரம் - வேலுகுமார் மோதல்



16

## தேர்தல் ஆணைக்குழுவுக்கு எதிராக வழக்கு வைப்போம்

### விஜயதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

வாக்காளர் ஒருவருக்கு 109 ரூபாய் செலவிடுவதற்கு முடியும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு நிர்ணயித்துள்ளதன் மூலம் தேர்தல் செலவு கண்காணிப்புச் சட்டத்தை ஆணைக்குழு முறைகேடாகப் பயன்படுத்தி இருக்கிறது.

அதனால் குறித்த சட்டமூலம் மக்களின் எதிர்பார்ப்பை வீணடித்துள்ள தேர்தல்கள் 16

## புதையல் தோண்ட முற்பட்டவர் கைது

(வவுனியா)

வவுனியா பன்றிக்கெய்தகுளம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட குற்றச்சாட்டில் ஒருவரை நேற்று அதிகாலை கைது செய்துள்ளதாக ஓமந்தைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவரிடம் இருந்து புதையலைக் கண்டறிவதற்காகப் பயன்படுத்தப் 15

## கொக்குத்தொடுவாயில் உறவுகள் போராட்டம்




03

## சிவகங்கை கப்பல் சேவை

## மூன்று நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டது

(சென்னை)

காங்கேசன்துறைக்கும் நாகப்பட்டினத்திற்குமான பயணிகள் கப்பல் சேவை வாரத்தில் 3 நாட்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக சிவகங்கை கப்பல் நிறுவனத்தின் பணிப்பாளர் நிரஞ்சன் தெரிவித்துள்ளார். 15

## நேரடி விவாதத்தில் பங்கேற்கத் தயார்

### திலித் ஜயவீர அதிரடி

(கொழும்பு)

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் 6 வேட்பாளர்களுக்கு இடையேயான விவாதத்தில் பங்கேற்க பெஃப்ரல் அமைப்பு விடுத்த அழைப்பை உத்தியோகபூர்வமாக ஏற்று திலித் ஜயவீர பங்கேற்பார் என அவரது உத்தியோகபூர்வ ஊடகப் பேச்சாளர் தனிந்து விதான வாசம்எழுத்து 15

## பாராளுமன்றத்தில் திருடர்கள் அரச நிறுவனங்களில் ஊழல்கள்

### நிறைவேற்று அதிகாரம் தேவை – பொன்சேகா



(ருவன்வெலிசாய)

பாராளுமன்றம் திருடர்களால் நிறைந்துள்ளது. அரச நிறுவனங்கள் ஊழலில் மூழ்கியுள்ளன. அவற்றைச் சீர்செய்ய ஜனாதிபதியிடம் நிறைவேற்றதிகாரம் இருக்க வேண்டும்.

எனவே எக்காரணம் கொண்டும் நிறைவேற்றதிகாரம் ஒழிக்கப்படக்கூடாது என ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். 15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாண்டியன்குளம் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய புனராவர்த்தன பிரதிஸ்டா

## மஹா கும்பாபிஷேக பெருஞ்சாந்தி பெருவிழா

**கர்மாரம்பம்**
19.08.2024
திங்கட்கிழமை
காலை 7.10 மணி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை யானைக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

**எண்ணெய்க்காப்பு**
20.08.2024 காலை
9.00 மணி முதல்
22.08.2024
பி.ப.2.00 மணிவரை

**கும்பாபிஷேகம் : 23-08-2024 (வெள்ளிக்கிழமை)**
**காலை 9.39 தொடக்கம் 10.30 வரை**

**விநாயகப்பெருமான் அடியார்களே!**

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் தழைத்தோங்குகின்ற முல்லைத்தீவு மாவட்டத்தில் பாண்டியன்குளம் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானுடைய மஹா கும்பாபிஷேகப் பெருஞ்சாந்தி பெரு விழா நிகழும் சுபமங்களகரமான குரோதி வருஷம் தட்ஷனாயனம் வருஷருது சிராவள பார்த்திரபத சிங்கமாச ஆவணித்திங்கள் 7ஆம் நாள் (23.08.2024) வெள்ளிக்கிழமை ரேவதி நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த நன்நாளில் விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் நடைபெற எம்பெருமானின் திருவருள் கைகூடியுள் ளது. எனவே அடியவர்கள் எல்லோரும் கலந்துகொண்டு எம்பெரு மானின் திருவருளைப் பெற்று மண்ணில் நல்ல வண்ணம் வாழ வேண்டி நிற்கின்றோம்.

பாண்டியன்குளம்,
நட்டாங்கண்டல்.

இங்ஙனம்
ஆலய பரிபாலன சபை

---

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் வில்வராஜா பத்மாவதி

தோற்றம் 31.07.1948 — மறைவு 24.08.2021

நீங்காத நினைவுகளால்
நீர்மல்கும் கண்களுடன்
மக்கள் மருமக்கள் உற்றார்
உலகோர் ஏங்காத நாளில்லை
ஏன் பறந்தீர் எம்மைவிட்டு
ஆண்டு மூன்று போனாலும்
இவ்வுலகில் நாம்வாழும் வரை
உங்கள் நினைவுகள் நீங்காமல்
நிலைத்திருக்கும்.

(274)

இல.06, செல்லர் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

தகவல்
குடும்பத்தினர்

---

# பதவி வெற்றிடம்

- **அலுவலகச் செய்தியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **முகாமைத்துவ உதவியாளர்கள்**
  (உயர்தரம் கற்றிருத்தல், இருபாலாரும்)
- **பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்**
  (சாதாரண தரம் கற்றிருத்தல், ஆண்கள்)

பொருத்தமானவர்கள் நேரில் அல்லது **076 097 3127** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். யாழ்ப்பாண நகருக்கு அண்மித்திருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

191, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

பொது முகாமையாளர்,
வலம்புரி நாளிதழ்.

---

# மரண அறிவித்தல்

## திருமதி தெய்வா கந்தசாமி

### (ஓய்வுநிலை சுகாதார உதவியாளர் தொண்டர் - வரணி அரசினர் வைத்தியசாலை)



மலர்வு 30.11.1945 — உதிர்வு 20.08.2024

பெரியதாயகம், இடைக்குறிச்சி, வரணியை நிரந்தர முகவரியாகவும் மரக்காலை ஒழுங்கை, சாமியன் அரசடி, நெல்லியடி, கரவெட்டியை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி தெய்வா கந்தசாமி அவர்கள் நேற்று 20.08.2024 இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிர்காமு(குழந்தை) - பொன்னி தம்பதியரின் அன்பு மகளும் திரு.வைரமுத்து கந்தசாமி (Retired Principal) அவர்களின் அன்பு மனைவியும் இன்பரதி (Teacher), அமரர் அமரகாந்தன், மற்றும் புனிதவித்தகன் (Contract Manager - QS - Access,PLC), புகழினி (Teacher), நிகரில்காந் (Senior Assistant Secretary - Ministry of Labour and forign Employment), எழில்முதல்வன் (DO - Office of the DCS - Personal and Training) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற வைரமுத்து இலட்சுமி, கந்தர் செல்லாச்சி ஆகியோரின் அன்பு மருமகளும் திருமதி சரஸ்வதிதேவி, காலஞ்சென்றவர்களான செல்லம்மா, தம்பிப்பிள்ளை, முத்துக்குமாரு, செல்லாச்சி, இராசரத்தினம், செல்லராசா ஆகியோரின் சகோதரியும் திவ்வியராசா, புஸ்பராணி, காலஞ்சென்றவர்களான இராசமலர், விஸ்ணுநாதன் ஆகியோரின் அண்ணியும் கிருஷ்ணமூர்த்தி (Retired ISA - Tamil), பவாநந்தினி (DO - Social Service - Colombo), சுபாசினி (Teacher), ரினோஜா (Do - DS office - Pandiyankulam), வதனமேகலை (Instructor - PDB), காலஞ்சென்ற ராஜினி ஆகியோரின் பாசமிகு மாமியாரும் அபிநயன்(QS), இலக்கணன் (University of Jaffna), மனோஜ் (University of Peradeniya), செம்பூவினி (Student), ஆற்றலன் (Student), ஆர்வலன் (Student) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் மரக்காலை ஒழுங்கை, சாமியன் அரசடி, நெல்லியடி, கரவெட்டியிலுள்ள இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் 21.08.2024 இன்று புதன்கிழமை காலை 9.30 மணியளவில் நல்லடக்கம் செய்வதற்காக முள்ளி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்

(273)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழியை சுற்றி கண்ணீர் விட்டு கதறிய உறவுகள்!

(நெளுக்குளம்)

**கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பாக பாரிய கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று கொக்குத்தொடுவாய் மனித புதைகுழிக்கு முன்பாக நேற்று இடம்பெற்றது.**





மனிதப்புதைகுழிக்கு நீதி, ஶ்ரீலங்கா இராணுவமே பொறுப்புக்கூற வேண்டும்!, ஓ.எம்.பி ஒரு ஏமாற்று வேலை: காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இன்னும் நீதி இல்லை, கொக்குத் தொடுவாய் மனித புதைகுழியில் இலங்கை இராணுவத்தின் பங்கை அம்பலப்படுத்துங்கள்!, வட்டுவாகலில் இராணுவத்தினரிடம் ஒப் படைக்கப்பட்ட எமது அன்புக்குரியவர்களை எங்கே கொன்று புதைத்தீர்கள்? உள்ளிட்ட பல்வேறு கோசங்கள் எழுதப்பட்ட பதாகைகளை தாங்கியவாறும் கோசங்களை எழுப்பியவாறும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.(நி-6)

முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட மனித புதைகுழி அகழ்வுப் பணியானது மூன்று கட்டமாக இடம்பெற்று 52 மனித எச்சங்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட நிலையில் மூடப்பட்டுள்ளது.

குறித்த அகழ்வுப் பணியின் போது கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் தொடர்பான எவ்வித உண்மைகளும் இதுவரை வெளிக்கொண்டுவரப்படவில்லை. எனவே கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி விடயத்தை மூடி மறைக்க வேண்டாம். எமக்கு உண்மையும் நீதியும் வேண்டும் எனக் கூறி குறித்த போராட்டம் இடம்பெற்றிருந்தது.

முல்லைத்தீவு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்ட குறித்த போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன்,வடக்கு மாவட்டங்களை சேர்ந்த முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் காணாமல் போனவர்களின் உறவினர்கள், சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள், சமூக செயற்பாட்டாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்து தமக்கான நீதி கோரி போராடியிருந்தனர்.

குறித்த போராட்டத்தில் கடும் வெயிலுக்கு மத்தியில் கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழியைச் சுற்றி கண்ணீர் விட்டு கதறி அழுததோடு குறித்த போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் உண்மையை மௌனமாக்காதே, கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் சாட்சிகளை அச்சுறுத்தாதே, கொக்குத்தொடுவாய்

# நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்!

## எனவே சிந்தித்து முடிவெடுங்கள் ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

சரியான பொருளாதார மாற்றமின்றி நெருக்கடியைத் தீர்க்கும் வேலைத்திட்டத்தை பாதியில் நிறுத்தினால் நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமூகவலைத்தளங்களில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்கும் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.எவராலும் தீர்க்க முடியாத பொருளாதார நெருக்கடியை தன்னால் தீர்க்க முடிந்தாலும் சரியான பொருளாதார மாற்றமின்றி நெருக்கடியை தீர்க்கும் வேலைத்திட்டத்தை பாதியில் நிறுத்தினால், நாட்டின் பொருளாதாரம் மீண்டும் வீழ்ச்சியடையும்.

சில கட்சிகள் உள்ளூர் பொருளாதாரம் பற்றி பேசுகின்றன. நாடு எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண புதிதாக சிந்தித்து கட்சி பேதமின்றி புதிய வேலைத்திட்டத்திற்கு செல்ல வேண்டும். அதற்காக ஒரு பெரும் குழு என்னுடன் இருக்கின்றது. அதனால் தான் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட தீர் மானித்துள்ளேன். கடந்த 75 வருட கால ஆட்சியாளர்கள் நாட்டின் அபிவிருத்திக்காக எதனையும் செய்யவில்லை என சில தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர். அது சரியல்ல.

இருப்பினும் நாடு, கடந்த 75 வருடங்களாக முன்னெடுத்துச் சென்ற சித்தாந்தங்கள் காரணமாகவே நாட்டில் விரைவான பொருளாதார வளர்ச்சியை எட்ட முடியவில்லை. எனவே இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது எதிர்காலம் குறித்து சிந்தித்து முடிவெடுக்க வேண்டும்."என ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)


unicef for every child
සෑම දරුවෙක් වෙනුවෙන්ම
ஒவ்வொரு சிறுவர்களுக்காகவும்

**REQUEST FOR EXPRESSION OF INTEREST (EOI)**

**REGISTRATION OF FEMALE LED ORGANIZATIONS FOR SUPPLY OF GOODS AND SERVICES FOR REGULAR PROGRAM AND EMERGENCY SUPPLIES.**

United Nations Children's Fund (UNICEF) has long embraced and prioritized gender equality and women's and girls' empowerment not only as core principles and practices, but as essential to the realization of the human rights and social development. UNICEF established its first Gender Policy in 2010, as the global community was advancing a more progressive normative framework around gender equality and the empowerment of girls and women. UNICEF believes that both the achievement of gender equality and the empowerment of all girls and women are paramount in their own right, as well as essential contributors to, and central elements of, inclusive and sustainable development and our vision of a more equitable world. Women-owned/led businesses contribute significantly to the world economy, generating millions of new employment opportunities and spurring local development. But their full economic potential remains largely untapped or underutilized.

In this connection UNICEF Sri Lanka wishes to create a database of suppliers whose organizations are led by females to ensure equal and fair opportunities for those organizations to participate in procurement activities of UNICEF and other UN agencies in Sri Lanka. UNICEF is creating this database on behalf of all UN agencies in Sri Lanka for their use as part of the UN Joint Procurement Team's terms of reference for promoting female led businesses through UN Business Operations Strategy. Therefore UNICEF, Sri Lanka Country Office invites EoIs from qualified and experienced institutions led by women to register as potential suppliers of goods and services to UNICEF and other UN agencies for the regular programs as well as emergency responses.

**Required expertise, experience, and capacity.**

- Expertise – Any type of goods or services
- Should be a legal entity registered in Sri Lanka.
- At least 5 years of experience in the respective trade.
- Female representation as owner/entrepreneur, partner, chairman, managing director or any other leadership position controlling the whole organization is a must.

Interested institutions are requested to follow the below steps to make their submission.

1. Register their business in the United Nations Global Marketplace (UNGM). Guidance for registration in UNGM can be found in **https://help.ungm.org/hc/en-us/artiles/360012810860-How-to-register-as-a-supplier-on-UNGM**
2. Complete the online form by scanning the QR code below. You will need to upload documentary proof of female leadership to a public shared drive such as google drive and share the link in the form. More details and instructions will be available in the form itself.

**Please make your submission on or before 30th September 2024. The form will be blocked after this date.**

**Please note:**

- We do NOT require any prices at this stage; we seek only your expression of interest for inclusion in the database.
- A response to this Request for Expression of Interest does not automatically ensure that you will be awarded any purchase orders or contracts. Responses will used to select suppliers for tenders and will be carefully reviewed, hence please ensure to provide accurate information in the EOI.
- For any technical clarifcations, you may contact the following staff via email: **mwickramasinghe@unicef.org or pulinda.perera@undp.org**

(சி-2373)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வடக்கு பாடசாலைகளுக்கிடையிலான உடற்பயிற்சி போட்டி முடிவுகள்



இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக் கான உடற்பயிற்சி போட்டியில் இளவாலை ஹென்றி அரசர் கல் லூரி 1 ஆம் இடமும் பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டியில் கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலயம் 1 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான உடற்பயிற்சி போட்டிகள் சாவகச்சேரி றிபேக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் இளவாலை ஹென்றி அரசர் கல்லூரி முதலாமிடத்தையும், ஊர்காவற்துறை சென் அன் ரனிஸ் கல்லூரி இரண்டா மிடத்தையும், வசாவிளான் மத்திய கல்லூரி அணி மூன் றாமிடத்தையும் பெற்றனர்.

அதேவேளை வடமாகாண பாடசாலை களுக்கு இடையிலான பெண்களுக்கான உடற்பயிற்சி போட்டி நேற்று முன்தினம் திங்கட் கிழமை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடை பெற்றது.

இதில் முதலாமிடத்தை கரம் பன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை மானிப் பாய் மகளிர் கல்லூரியும் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(நி-6-90)



கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் மகா வித்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3201

நடேஷ்




நிரோ




மதுஷாந்




சபரிஷா




அஸ்வின்




பிரசாத்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் முற்றாக ஒழிக்கப்படும்-சஜித்

(கொழும்பு)

தமது அரசாங்கத்தின் கீழ் சட்டத்தை உரிய வகையில் நடைமுறைப்படுத்தி போதைப் பொருளை முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுப்பதாக ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதி பதி வேட்பாளர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

மீரிகம பகுதியில் இடம் பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

போதைப்பொருள் பாட சாலை கட்டமைப்பை ஆதிக்கத் திற்குட்படுத்தி உள்ளது.

அரசாங்கத்திற்குப் புள்ளி களைப் பெற்றுக் கொள்கின்ற கண்காட்சிக்குரிய வேலைத் திட்டத்திலேயே அரசாங்கம் செயற்படுகின்றது.

நாட்டின் முக்கியஸ்தர்க ளுடன் போதைப்பொருள் விநியோகஸ்தர்கள் தொடர்பு வைத்திருக்கிறார்கள்.



போதைப் பொருட்களை இல்லாது ஒழிப்பதற்காகக் கடு மையான சட்ட நடவடிக்கைகள் தமது அரசாங்கத்தின் கீழ் முன் னெடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனா திபதி வேட்பாளர் சஜித் பிரே மதாச தெரிவித்துள்ளார். (நி-6)




# ரணிலுடன் இணைந்தார் அசோக பிரியந்த

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்கவுக்கு ஆதரவளிக்க உள்நாட்டலுவல்கள் இரா ஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தீர்மானித்துள்ளார்.

பிரதமர் தினேஷ் குண வர்தன தலைமையில் நேற்று காலை கொழும்பில் உள்ள டெம்பிள் ஹவுஸில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்டு அசோக பிரியந்த தனது தீர்மானத்தை தெரிவித்துள்ளார்.

இதேவேளை அசோக பிரியந்த, நாமல் ராஜபக்ஷவுக்கு ஆதரவளிக்க முன்னர் தீர் மானித்திருந்தமை குறிப்பிடத் தக்கது. (நி-6)

## 666 முறைப்பாடுகள் இதுவரை பதிவு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் ஒரு நாளில் மட்டும் 35 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள் ளது.

அதன்படி, ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் இதுவரை (ஜூலை மாதம் 31 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி வரை) 666 முறைப் பாடுகள் கிடைக்கப்பெற்றுள் ளன. இந்நிலையில் தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர் பில் தேசிய தேர்தல் முறைப் பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 349 முறைப் பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 293 முறைப் பாடுகளும் கிடைக்கப்பெற்று ள்ளன. இதேவேளை, மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகா மைத்துவ நிலையத்திற்கு வன் முறைச் சம்பவங்கள் தொடர் பில் ஒரு முறைப்பாடும் ஏனைய விடயங்கள் தொடர்பில் 23 முறைப்பாடுகளும் கிடைக்கப் பெற்றுள்ளன. (நி-6)

## மனவளக்கலை பயிற்சிகள்

(யாழ்ப்பாணம்)

மனவளக் கலைமன்ற அறக்கட்டளையின் ஏற்பாட் டில் யாழ். அறிவுத்திருக் கோவிலில் மனவளக் கலைப் பயிற்சிகள் சமகாலத்தில் வெளிநாட்டில் இருந்து வருகை தந்திருக்கும் மக்க ளுக்காக சிறப்பாக ஏற்படுத் தப்பட்டிருக்கும் அரிய சந் தர்ப்பம். தமிழகத்தில் இருந்து வருகைபுரிந்திருக்கும் பேரா சிரியை சி.ராம்குமாரி (M.Aயோகா, Phd யோகா) தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் பயிற்சிகள் நடை பெறவுள்ளது.

தங்களுக்கு ஏற்றபடி நேரங்களைத் தெரிவு செய்யவும் அறங்காவலர்கள் தயாராகவுள்ளனர்.

மேலதிக தகவல்களுக்கு 021 222 2772 எனும் அலு வலகத் தொலைபேசி இலக் கத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (நி-6)

## கந்தனைக் கண்டேனடி...

**பல்லவி**

கந்தனைக் கண்டேனடி.... தோழி
கந்தனைக் கண்டேனடி.... எந்தன்
சிந்தையை மயக்கிய காந்தனை - நல்லூரில்

**அனுபல்லவி**

மந்த மா ருதம்வீச கோலமயிலினில்வந்து
அந்தரங்கமாக என்னை ஓர விழியால் பார்த்த (கந்தனை...)

**சரணம்-1**

ஆயிரம் ஆயிரம் பத்தர்கள் போற்றிநிற்க
நாதமங் கலங்கள்யாவும் நாற்றிசையும் ஒலிக்க
வேத மந்திரங்களோ ஓம்ஓம் என்றொலிக்க
காதினிக்கக் கண்ணால்பேசி காதலைச் சொன்னானடி (கந்தனை...)

**சரணம்-2**

மங்கல ஆரத்திகள் மாந்தர்கள் எடுத்துநிற்க
மங்கையர் நாணத்துடன் அவன்முகம் நோக்கி
அங்கமெலாம் சிலிர்க்க நல்லடியார் கூவி நிற்க
செங்கையில் மாலைசூடி மணமாலை சூட்டி நிற்க (கந்தனை...)

**சரணம்-3**

மங்கையர் கூடி நின்று நறுமணப் பூச்சொரிந்தார்
சங்கம் முழங்கப் பத்தர் நடனமிட்டே வந்தார்
குங்குமம் சூடி நின்று அடியவர் வாழ்த்துச் சொன்னார்
மங்கல வாழ்த்திசைத்து கந்தனைப் போற்றி நின்றனர்(கந்தனை...)

**எஸ். சிவானந்தராஜா, பண்டத்தரிப்பு.**

## நல்லைக் கந்தவேளே!

கார்த்திகைப் பெண்களின் கனிவான வன்பிலே
கலந்துமோர் குழந்தையானாய்
பார்புகழ்ந் தேற்றவே பாவாணர் போற்றவே
பைந்தமிழ்த் தலைவனாய்
கார்மேவும் குன்றெலாம் குன்றாம லோங்கியே
கோலவடி வைக்காட்டினாய்
சீர்மேவுங் கலைநிறை யாழ்ப்பாண மீதிலுறை
சேர்நல்லைக் கந்தவேளே!

**கலாபூஷணம், சந்தக்கவிஞர்,**
**நவ.பாலகோபால்.**

# இராசிபலன்

21.08.2024
ஆவணி 05 , புதன்கிழமை
துதியை முன்னிரவு 8.42 மணிவரை

சதயம் காலை 6.30 மணிவரை
பூரட்டாதி பின்னிரவு 4.58மணிவரை
சுப நேரம்4.35-6.05 மணிவரை
இராகு காலம்-12.05 -1.35 மணிவரை

சந்திராஷ்டமம்
புநர்பூசம்.

**வளவன்**

**மேஷம்** எதிர்காலம் இனிமையாக அமைய திட்டமிடுவீர்கள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும்.

**ரிஷபம்** தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், வாழ்க்கைத் தரம் உயர வழிவகை செய்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், பூர்வீகச் சொத்து சம்மந்தப் பட்டவகையில் நன்மையுண்டு, புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பயணுன்டு.

**கடகம்** மகிழ்ச்சி குறையாதிருக்க மற்றவரை அனுசரித்துச் செல்வது நல்லது, பிரயாண பயமுண்டு, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், ரோக பயமுண்டு.

**சிம்மம்** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், கனவு பலிதமுண்டு, தொலைபேசி தகவல்கள் மகிழ்ச்சி தரும், பொரு ளாதார நிலையில் திருப்தி காண வேண்டிய நாள், வாகன சுக முண்டு.

**கன்னி** கூட்டு முயற்சிகள் வெற்றி தரும், எதிரிகளாக இருந்தவர்கள் மனம் மாறுவார், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகக் கிடைக்கும், உடல் நலனில் உற்சாகம் கிடைக்கும்.

**துலாம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**விருச்சிகம்** வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கை கூடும், முன்னேற்றம் காணும் நாள், பாராட்டும் புகழும் கூடும்.

**தனுசு** மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், உடன் பிறப்புகள் அனுசரணையாக நடந்து கொள்வார்கள், பாகப்பிரிவினைகள் சுமூகமாக அமையும், போசன சுகமுண்டு.

**மகரம்** தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாக மடைவீர்கள், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள், நண்பர்களின் ஒத்துழைப்புக் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கும்பம்** உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகதியான நாள்.

**மீனம்** தொழில் சிறு மாற்றம் செய்யும் சூழ்நிலை உருவாகும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்வீர்கள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது.

**ஆணவமும் அகம்பாவமும் என்றாவது ஒரு நாள் நமக்கு எதிரியாக நிற்கும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிக்க வேட்பாளர்கள் உறுதியளிக்க வேண்டும்

## சிவில் சமூக பிரதிநிதிகள்

(கொழும்பு)

2024 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் அனைத்து வேட்பாளர்களும் புதிய பாராளுமன்றத்தின் ஒரு வருட காலத்தில் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவோம் என்ற உறுதியான பகிரங்கமான உறுதிமொழியை வழங்க வேண்டும் என சிவில் சமூக பிரதிநிதிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

1978ஆம் ஆண்டின் அரசமைப்பின் 48 வருடகால செயற்பாட்டின் அனுபவங்கள், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை ஏற்படுத்தப்பட்ட நோக்கத்தை அது நிறைவேற்றவில்லை என்பந்த வெளிப்படுத்தியுள்ளது என சிவில் சமூகத்தின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

நிறைவேற்றதிகாரம் பொருளாதாரத்தின் மீது புறக்கணிக்கத்தக்க தாக்கத்தினையே ஏற்படுத்தியுள்ளது.

போதிய பொறுப்புக்கூறலின்மை காணப்படுவதாலும் பதிலளிக்கும் தன்மை இன்மையாலும் நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறை இந்த விரும்பத்தகாத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. அது ஏதேச்சதிகாரம்,ஊழல் திறமையின்மை என்பவை இலங்கையின், இலங்கையர்களின் பொது நன்மையை தோற்கடிப்பதற்கு உதவியுள்ளது என சிவில் சமூக பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர். (நி-6)

# ‘இந்துநெறி’ நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இந்துமன்றத்தின் பொன்விழா சிறப்பு மலர் “இந்துநெறி” நூல் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை பி.ப 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இந்து மன்றத் தலைவர் செல்வன். க. கஜன் தலைமையில் இடம் பெறும்.

இந் நிகழ்வில் ஆசியுரையினை இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச. பத்மநாபன், வரவேற்புரையினை இந்துமன்ற பத்திராதிபர் செல்வி. கை. நிவேதா, சிறப்புரையினை யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர். சி.சிறிசற்குணராசா, வெளியீட்டுரையினை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை பேராசிரியர் ச. முகுந்தன் மற்றும் நன்றியுரையினை இந்து மன்றத்தின் செயலாளர் செல்வி. நா. றம்சி ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# எல்லை தாண்டி மீன்பிடி 22 இந்திய மீனவர்கள் கைது

(புத்தளம்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி கற்பிட்டி வடக்கு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 22 இந்திய மீனவர்களையும் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு புத்தளம் மாவட்ட நீதிவான் நேற்று உத்தரவிட்டுள்ளார்.

இரண்டு படகுகளில் தமிழகம்-தூத்துக்குடியில் இருந்து வந்த மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த இந்திய மீனவர்கள் 22 பேரும் எல்லை தாண்டி புத்தளம் - கற்பிட்டி வடக்கு கடற்பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது கடந்த 5 ஆம் திகதி இரவு கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், குறித்த இந்திய மீனவர்கள் பயணித்த இரண்டு விசைப்படகுகளும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைதுசெய்யப்பட்ட 22 மீனவர்களும் மேலதிக சட்டநடவடிக்கைகளுக்காக புத்தளம் மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர் அவர்கள் புத்தளம் மாவட்ட நீதிமன்றில் ஆஜர் படுத்தப்பட்ட வேளையில் குறித்த நபர்களை மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார். (நி-6)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இளங் கலைஞர் மன்றம் மற்றும் தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் இணை அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று புதன்கிழமை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

மாலை 6.43-7.10 மணிவரை இணுவில் தீபம் இசைக்கல்லூரியின் குழு இசையின் எம்.எஸ் பிரதீபனின் நெறியாள்கையில் வயலின்-இ.நிரோஜன், மிருதங்கம்-வ.ரமண சர்மா, கஞ்சிரா-ர.லயசர்மா, கடம்-ந.ஜெனகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.அதனைத் தொடர்ந்து 7.15-8.05 மணிவரை இடம் பெறவுள்ள இசையரங்கில் பாட்டு- எம். எஸ். பிரதீபன், வயலின்-இ. நிரோஜன் மிருதங்கம்-ம. லோகேந்திரன், கஞ்சிரா-ர. லயசர்மா மற்றும் கடம்- சி. மாதுளன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (நி-6)

# யோகா பயிற்சிநெறி விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில் இலவச யோகக்கலைப் பயிற்சிநெறியின் (அடிப்படை), புதிய பிரிவு 03 இற்கான வகுப்புக்கள் எதிர்வரும் 14.09.2024 தொடக்கம் 64 மணித்தியாலங்கள் வார இறுதி நாட்கள் மற்றும் அரச விடுமுறை நாட்களில் யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன).

(இளைஞர் விவகார அலகில் விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுப் பூர்த்தி செய்து சமர்ப்பித்து, இப்பயிற்சியில் கலந்து கொள்ளலாம். அத்துடன் விண்ணப்பப்படிவம் பெற்று பதிவினை மேற்கொள்ளாதவர்களும் பயிற்சியின் ஆரம்ப தினத்தில் (14.09.2024) பயிற்சி நடைபெறும் இடத்திற்கு காலை 6 மணிக்கு வருகை தந்து விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பூர்த்தி செய்து வளவாளரிடம் தமது பதிவினை மேற்கொண்டு பயிற்சியில் இணைந்து கொள்ளலாம் என வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார். (நி-6)

# தொழுநோய் தொடர்பான விழிப்புணர்வு செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் உடல், உள ரீதியிலான தாக்கங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் கலந்துரையாடல் ஒன்று யாழில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட ஹொக்கி அணியுடன் இணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வை காவேரி கலாமன்றம் ஒழுங்குபடுத்தியிருந்தது.

விளையாட்டு வீரர்கள் சூழலியல் பார்வையில் அக்கறை உள்ளவர்களாக இருப்பதன் ஊடாக எவ்விதமாக உடல் ஆரோக்கியம் மிக்க ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப முடியும் என்பது குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலேயே இந்த கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.

விருந்தினர்கள், துறைசார் வைத்திய நிபுணர்கள், தொழுநோயாளர் மறுவாழ்வுக்கான சங்கத்தினர், காவேரி கலாமன்றத்தினர், யாழ்ப்பாண மாவட்ட ஹொக்கி அணியினர் என பலர் இதில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# அரங்க நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

யா/இராமநாதன் கல்லூரியின் 110 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு பழைய மாணவர்களின் அரங்க நிகழ்ச்சிகள் இன்று புதன்கிழமை பி.ப 3 மணிக்கு கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் அதிபர் திருமதி. அம்பிகை சிவஞானம் தலைமையில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பழைய மாணவி இசைக்குயில் திருமதி. விஜயலக்சுமி சீனி வாசகம் (கனடா) கலந்து கொள்ளவுள்ளனர். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>கி.பா: 16 1/2<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில் : Mobile engineering,தொழில்நுட்ப உதவியாளர்<br>எதிர்பார்ப்பு:படித்த அரச உத்தியோகம் பெண்<br>தொ.இ: B/14731 | பிறப்பு:1987-இந்து<br>நட்சத் திரம்: ரேவதி<br>11இல்சூரிசெவ்<br>கி.பா: 21 1/4<br>உயரம் : 5'3"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14752 |
| பிறப்பு:1997-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>கி.பா:16<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்:College, English Teacher<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்<br>தொ.இ: B/14733 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>7இல் செவ்<br>கி.பா:22 உயரம் : 5'1"<br>தகைமை/தொழில்:Civil Engineer,<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ: G/14753 |
| பிறப்பு:1984-இந்து<br>நட்சத்திரம்:உத்திராடம்<br>10இல் செவ் உயரம் :5'2"<br>தகைமை/தொழில்:A\L,சாரதி (Gov)<br>எதிர்பார்ப் பு:நற் குணமுள்ள படித்த பெண்<br>தொ.இ: B/14735 | பிறப்பு-1996-இந்து<br>நட்சத்திரம்:சுவாதி<br>10இல் செவ்<br>கி.பா:10 உயரம் :5'3"<br>தகைமை/தொழில்:BA,NGO<br>எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம் வெளிநாடு<br>தொ.இ: G/14755 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அஞ்சல் மூலம் வாக்களிக்க 7 இலட்சம் அரச சேவையாளர்கள் தகுதி

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூலம் வாக்களிப்பதற்கு 7 இலட்சம் அரச சேவையாளர்கள் தகுதி பெற்றுள்ளனர் என தேர்தல்கள் ஆணைக்குழு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தநிலையில், ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல்மூல வாக்கெடுப்பை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 4, 5 மற்றும் 6ஆம் திகதிகளில் நடத்துவதற்குத் தேர்தல்கள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளது.

மாவட்டச் செயலகங்கள், தேர்தல் அலுவலகங்கள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு செப்ரெம்பர் 4ஆம் திகதி, அஞ்சல் மூல வாக்களிப்பை செலுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரம் குறித்த 3 தினங்களில் அஞ்சல் மூலம் வாக்களிக்கத் தவறியவர்களுக்காக செப்ரெம்பர் மாதம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகள் வாக்களிப்புக்கான மேலதிக தினங்களாக ஒதுக்கப்பட்டுள்ளன. (நி-6)

## பொன்விழாவும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

பொன். சுகந்தனின் இரசிகர் வட்டம் நடத்தும் பொன்விழாவும் பொன். சுகந்தனின் வரலாறு நூல் வெளியீடும் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 மணிக்கு கொழும்பு தமிழ்ச்சங்க மண்டபத்தில் மேனாள் அரசாங்க அதிபர் உடுவை. எஸ்.தில்லை நடராசா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக வேந்தர் பேராசிரியர் சி. பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார். (நி-6)


**லங்கா மஹால் (PVT) LTD**

DHL உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை

அதிவிரைவாக குறைவான விலையில் இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை. (சி-264)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு : 00919566156719

Western Union WU MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, 077 839 3974


## ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை : மானிப்பாய் கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : சுந்தரமூர்த்தி சுதந்தன்**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் : உரிமையாளர்**

**ஆதன இல -92 வீதி - தாவடி வீதி, வட்டாரம் - 04**

வட்டாரம் **04 தாவடி வீதி,** ஆதன இலக்கம் **92** இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் **சுதுமலை இறை "அளகப்புலம்"** எனும் பெயருள்ள குளி **10.35** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு **திருமதி.அபர்ணா ஜனார்த்தன்** அவர்களால் எழுதப்பட்ட **1474 ஆம்** இலக்க **2022.09.10** ஆம் திகதிய உறுதி மூலம் சுந்தரமூர்த்தி சுதந்தன் என்பவரால் இவ் ஆதனத்தின் உரிமையாளர் தாமே என வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **T.பாலசுப்பிரமணியம்** அவர்களால் வரையப்பட்ட **1814/2022** ஆம் இலக்க **2022.09.14** ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் குளி **10.35** கொண்ட இவ் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

வடக்கு **-தாவடி மானிப்பாய் வீதி**
கிழக்கு **-துண்டு 03 உம் நடராஜா குணரட்ணத்தின் ஆதனமும்**
தெற்கு **- துண்டு 2 உம், 3 என்ற சுந்தரமூர்த்தி சுதந்தனின் ஆதனமும்**
மேற்கு **- புவியா கார்த்திகேயன்**

மேற்குறித்த ஆதனத்தை **சுந்தரமூர்த்தி சுதந்தன்** என்ற பெயரில் சபையின் ஆதன பதிவேடுகளில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(1742)

செயலாளர்,
வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,
மானிப்பாய்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்




### திரு.கலாநிதி பசுபதி இராசேந்திரம் (J.P)

ஐக்கிய இயற்கை சர்வதேச சமாதானத்திற்கான அமைப்பினால் உலகளாவிய தலைமைத்துவ 4 ஆவது தேசிய மாநாடும் தேசிய விருது வழங்கும் நிகழ்வும் கடந்த 18.08.2024 ஞாயிறு யாழ்ப்பாணம் உரும்பிராய் கற்பக இராஜேஸ்வரி மண்டபத்தில் நடைபெற்றது.
இதில் பன்முக ஆளுமை கொண்ட சமூக சேவையாளன் ஊரெழு கிழக்கு வளர்பிறை சனசமூக நிலையத்தின் மூன்று சகாப்தங்கள் தலைவராகவும் , ஞான வைரவர் ஆலய பரிபாலன சபையின் செயலாளராக நான்கு தடவைகளும் , கிராம அபிவிருத்திச்சங்கத்தின் செயலாளராகவும், வலி கிழக்கு தென் பகுதி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும், அகில இலங்கை சமாதான நீதவானாகவும், முன்னாள் மத்தியஸ்தர் சபை உறுப்பினர் போன்ற பரிணாமங்கள் கொண்ட ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திரு.பசுபதி இராசேந்திரம் (கௌரவ கலாநிதி) அவர்களுக்கு நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட கல்வி இராஜாங்க அமைச்சர் கௌரவ அரவிந்தகுமார் அவர்களின் கரங்களினால் கௌரவ கலாநிதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது.
மேலும் நீண்ட ஆயுளுடன் பல்லாண்டு காலம் வாழ்ந்து சமூகப்பணிகளைத் தொடர எல்லாம் வல்ல நாவலம்பதி ஞானவைரவப் பெருமானை வேண்டி எங்களது குடும்பங்களின் சார்பில் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

"தயா இல்லம்"
வளர்பிறை, ஊரெழு கிழக்கு. (741)

பிள்ளைகள், மருமக்கள்,


தெரிவுசெய்த பொருட்கள் 40% வரை கழிவு



JAFFNA EXPO - 2024

நிர்மாணம், கைத்தொழில், கல்வி,
வர்த்தக கண்காட்சி மற்றும் களியாட்ட விழா
23 24 25 ஆம் திகதி ஆகஸ்ட் 2024
@ முற்றவெளி விளையாட்டரங்கு, யாழ்ப்பாணம், இலங்கை
மு.ப.10.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை

கட்டிடம் மற்றும் நிர்மாணப் பொருட்கள்
கட்டுமான ஆலோசனை சேவைகள்
கல்வி, மற்றும் தகவல் தொழில்நுட்பம்
கட்டுமான இயந்திரங்கள் மற்றும் கைத்தொழில் வாகனங்கள்
உபகரணங்கள் மற்றும் சாதனங்கள்
நிலைபேறான வலுசக்தி
கைத்தொழில் மற்றும் பொறியியல்
கமத்தொழில் வாகனங்கள்

ALLUMEX TVS asianpaints Blue Ocean SCOT CAMPUS வலம்புரி
DAV agro EME CIOB Ceylon Institute of Builders

+94 77 22 79 594
+94 72 21 22 709


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## இந்தியப் பிரதமர் உக்ரைனுக்கு விஜயம்



(டில்லி)
உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி உக்ரைன் செல்லவுள்ளார்.

அவர்நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை இந்த விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்ய மற்றும் உக்ரைனுக்கு இடையிலான போர் தொடர்ந்தும் நீடித்து வருகின்றது.

கடந்த மாதம் நரேந்திர மோடி, ரஷ்யாவுக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த போது ஐரோப்பிய நாடுகள் மத்தியில் அது பரவலாக விமர்சிக்கப்பட்டிருந்தது.

இதற்கிடையில் இந்தியப் பிரதமர் உக்ரைனுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

ரஷ்ய மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளுக்கு இடையில் போர் ஆரம்பித்ததிலிருந்து நரேந்திர மோடி உக்ரைன் செல்வது இதுவே முதற்தடவையாகும்.

இதன்போது இருநாடுகளுக்கும் இடையிலான அமைதிப் பேச்சுவார்த்தை குறித்துக் கலந்துரையாடப்படும் என குறிப்பிடப்படுகின்றது. (நி-6)

## சீனாவில் 'கேமி

➤ 50 பேர் உயிரிழப்பு

➤ 1700 இற்கும் அதிக வீடுகள் சேதம்

(பீஜிங்)
**சீனாவில் ஏற்பட்ட கேமி சூறாவளியினால் 50பேர் உயிரிழந்துள்ளனர்.**

சீனாவில் ஹூனான் மாகாணத்தில் உள்ள ஜிசிங் நகரில் ஏற்பட்ட குறித்த சூறாவளி காரணமாக அங்கு கனமழை பெய்து வருகின்றது.

இதன்காரணமாக நூற்றுக் கணக்கான இடங்களில் மண்சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், இதனால் 1,700இற்கும் அதிகமான வீடுகள் சேதம் அடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.அத்துடன் 23,419 பேர் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும் குறித்த அனர்த்தத்தினால் சிக்குண்டு இதுவரை 50 பேர் வரை உயிரிழந்துள்ளனர் எனவும், 15 பேர் காணாமற் போயுள்ளனர் எனவும் அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மீட்புப் படையினர் பாதிக்கப்பட்ட பகுதிகளில் முகாமிட்டு, மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## சிங்கப்பூரிலும் பரவியது குரங்கு அம்மை 10 பேருக்கு பாதிப்பு

(சிங்கப்பூர்)
சிங்கப்பூரில் 10 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்பட்டதால் அங்கு வேகமாகப் பரவி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

எம்பாக்ஸ்" என அழைக்கப்படும் குரங்கு அம்மை தொற்று ஆபிரிக்காவில் வேகமாக பரவி வருகிறது. நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்ட விலங்குகளிடமிருந்தே மனிதர்களுக்குப் பரவுகிறது.

மேலும் மலேசியா, இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தடுப்பு நடவடிக்கை எடுத்து வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்நிலையில் சிங்கப்பூரில் 10 பேருக்கு குரங்கு அம்மை பாதிப்பு கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இதையடுத்து அந்நாட்டு சுகாரத்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில், முக கவசம் அணிவது, கைகளை அடிக்கடி கழுவுவது, உள்ளிட்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. (நி-6)

## சிசிலி தீவுக்கு அருகே கவிழ்ந்த சொகுசு கப்பல்

### ஒருவர் பலி, அறுவர் மாயம்

(வத்திக்கான்)
இத்தாலியின், சிசிலி தீவுகளுக்கு அருகே சொகுசு படகு ஒன்று கடலில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன் மேலும் 6 பேரைக் காணவில்லை.

பிரித்தானியக் கொடியுடன் பயணித்த 56 மீற்றர் நீளமான கப்பலில் 22 பயணிகள் மற்றும் பணியாளர்கள் இருந்ததாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அப்பகுதியில் நிலவும் மோசமான வானிலை காரணமாக ஏற்பட்ட சூறாவளியே இந்த விபத்திற்கு காரணம் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கப்பலில் பயணித்தவர்களில் இலங்கையர் ஒருவரும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பிரித்தானிய, அமெரிக்க மற்றும் கனேடிய பிரஜைகள் அடங்கிய குழுவொன்று சொகுசு படகில் பயணித்துள்ளதுடன், விபத்தில் உயிரிழந்த நபரின் அடையாளம் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை.

காணாமல் போன 6 பேரை தேடும் பணியை கரையோர பாதுகாப்பு அதிகாரிகள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஒலிம்
## உண



(பீஜிங்)
18 வய

## ஜம்மு காஷ்மீரில் நிலநடுக்கம்

(டில்லி)
இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் பாரமுல்லா பகுதியில் அடுத்தடுத்து இரண்டு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

அதன்படி முதலாவது நிலநடுக்கம் நேற்றுக் காலை 6.45 மணியளவில் 4.9 அளவில் பதிவாகியது. பின்னர் 4.8 என பதிவாகியது.

முதல் நிலநடுக்கத்தில் இருந்து 10 கி.மீ ஆழத்தில் 4.8 ரிக்டர் அளவில் இரண்டாவது நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக இந்திய நிலநடுக்கத்திற்கான தேசிய மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கங்களால் ஏற்பட்ட சேதம் இதுவரை மதிப்பிடப்படவில்லை. (நி-6)

## நான் ஜனாதிபதி; அமைச்சர் மஸ்க் ட்ரம்ப் அதிரடி அறிவிப்பு



(வோஷிங்டன்)
அமெரிக்காவில் வரும் நவம்பர் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடக்க உள்ள நிலையில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

ஆளும் ஜனநாயக கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தற்போதைய துணை ஜனாதிபதி கமலா ஹாரிஸ் போட்டியிடுகிறார். குடியரசுக் கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் போட்டியிடுகிறார். கமலா ஹாரிஸை தனிப்பட்ட முறையிலும் தாக்கிப் பேசி வரும் டொனலட் ட்ரம்ப், கமலா ஹாரிஸை கம்யூனிச தலைவராக சித்தரிக்க முயன்று வருகிறார்.

இதற்கிடையில் உலகின் முன்னணி பணக்காரர்களில் ஒருவரும், ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா மற்றும் எக்ஸ் தளத்தின் உரிமையாளருமான எலான் மஸ்க் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் களம் காணும் டொனால்ட் டிரம்ப் ஐ கடந்த ஓகஸ்ட் 13 அன்று நேர்காணல் செய்தார்.

இந்த நிலையில்தான்.

தான் வெற் மஸ்க் ஒரு வெள் சகர் கொ என்று இதற் ட்ரம் வெள் கராக அவரி நடந் பாராங் ஆன அதை திருந் தான் இதுகு யாக ளார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மி' சூறாவளி!

➤ 15 பேர் மாயம்

➤ மீட்புப் பணிகள் தீவிரம்

தம்

ல்



னவும்
விக்கப்பட்

ப் படை
திகளில்
வடிக்கை
வதாகத்
(நி-6)

சுனாமி விழுங்கிய மனைவி

## 13 வருடங்களாக கடலுக்குள் தேடும் கணவன்

(டோக்கியோ)

ஜப்பான் மக்களிடம் உங்களது வாழ்வில் மிக மோசமான நாள் எது என கேட்டால், நிச்சயமாக 2011 ஆம் ஆண்டில் மார்ச் 11 ஆம் திகதியை சொல்வார்கள். தோஹோகு நிலநடுக்கம் ஏற்படுத்திய சுனாமி, கிட்டத்தட்ட 40 மீற்றர் உயரத்திற்கு அலைகளை ஏற்படுத்தியது. 40 மீற்றர் என்றால் உங்களால் புரிந்து கொள்ள முடிகிறது தானே. கிட்டத்தட்ட 132 அடி உயரம்.

இந்தச் சுனாமியின் விளைவாக 4 லட்சத்து 50 ஆயிரம் பேர் வீடற்றவர்களாக மாறினர். 18 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர். நாட்டின் உட்கட்டமைப்பைக் கடுமையாகச் சேதப்படுத்தியது இந்த சுனாமி. 2500 பேரை காணவில்லை, அவர்களது உயிர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று அதிகாரபூர்வமாகவே தெரிவிக்கப்பட்டது.

இப்படிக் காணமல் போனவர்களில் ஒருவர் தான் யூகோ என்ற பெண். ஜப்பானைச் சேர்ந்த யசுவோ தகமாட்சு என்பவரது மனைவி.

சுனாமியில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான பேர்களில் யூகோவும் ஒருவர். சுனாமி ஏற்பட்டபோது தகமாட்சு தான் வேலை செய்யும் இடத்தில் இருந்தார்.

கோரத்தாண்டவம் ஆடிய சுனாமியில், மனைவியின் உடல் கிடைக்கவில்லை என்றாலும், தனது மனைவிக்கு முறையாக இறுதிச் சடங்கு செய்ய வேண்டும் என்ற நோக்கில் கடலுக்குள் தேடி வருகிறார் தகமாட்சு.

முதல் இரண்டு நாட்கள் அவர் கடற்கரை, காடுகள், மலைப்பகுதிகளில் மனைவியின் உடலைத் தேடினார். அடுத்த வாய்ப்பாக அவருக்கு இருந்தது கடல் மட்டுமே.

ஒருநாள், இரண்டு நாளாக அல்ல. கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கும் மேலாக வாரத்திற்கொரு முறை கடலுக்குள் தேடி வருகிறார் தகமாட்சு. கடலின் ஆழத்தில் அதிலும் சுனாமியின் ஆழத்தில் காணாமல் போன ஒருவரது உடலைத் தேடி எடுப்பது என் பது அத்தனை சுலபமான காரியமா? பலரும் அவரை தடுத்தனர். வேண்டாம் என்றனர். ஆனால், வார்த்தைகளுக்கு கட்டுப்பட்டு கிடப்பதா காதல்? தேடினார். தேடுகிறார். தேடுவார். (நி-6)







## ஒலிம்பிக்கில் வெள்ளிப்பதக்கம் வென்றும் உணவகத்தில் பணியாற்றும் வீராங்கனை





(பீஜிங்)

18 வயதான சோ யாக்கின் சில வாரங்களுக்கு முன்பு ஒலிம்பிக் போட்டியை அலங்கரித்த நிலையில், தற்போது நாடு திரும்பியுள்ளார்.

ஒலிம்பிக் போட்டி திருவிழா முடிந்த கையோடு சோயாக் கின் தன் பெற்றோர் நடத்தும் உணவகத்தில் அவர்களுக்கு உதவ தொடங்கியுள்ளார்.

தனது சொந்த ஊரிலேயே இயங்கி வரும் சிறிய உணவகத்தில் சோயாக்கின், உணவு பரிமாறி வருகி றார்.

ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற நிலையில், உணவகத்தில் சோயாக்கின் உணவு பரிமாறும் காட்சிகள் அடங்கிய வீடியோ சமூக வலைத்தளங்களில் அதிகம் பகிரப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

தான் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றால், எலான் மஸ்க் அமைச்சர்சபையில் ஒரு பதவியையோ அல்லது வெள்ளை மாளிகை ஆலோசகர் பதவியையோ ஏற்றுக் கொள்ள வலியுறுத்துவேன் என்று தெரிவித்துள்ளார். இதற்கு முன்னதாகவும் ட்ரம்ப் ஜனாதிபதினால் வெள்ளை மாளிகை ஆலோசகராக எலான் மஸ்க் இருக்க அவரிடம் பேச்சுவார்த்தை நடந்ததாக அரசியல் வட்டாரங்களில் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால் எலான் மஸ்க் அதை முற்றிலும் மறுத்திருந்தார். இந்த நிலையில் தான் ட்ரம்ப் பொது வெளியில் இதுகுறித்து வெளிப்படையாகவே தற்போது பேசியுள்ளார். (நி-6)

## கத்தரிக்கோல் காணாமல் போனதால் ஜப்பானில் விமானங்கள் இரத்து



(டோக்கியோ)

விமான நிலையத்தில் கத்தரிக்கோல் ஒன்று காணாமல் போனதால் விமானங்கள் இரத்து செய்யப்பட்ட சம்பவம் ஒன்று ஜப்பானில் இடம்பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமை ஜப்பானில் ஹொக்கைடோவின் நியூசிட் டோஸ் விமான நிலையத்தின் உள் நுழையும் வாயிலின் அருகே இருந்த கடையொன்றில் கத்தரிக்கோல் காணாமல் போனதால் 36 விமானங்கள் இரத்து செய்யப்பட்டதோடு, 201 விமான சேவைகள் தாமதமடைந்துள்ளன. விமான நிலையத்தின் உள்நாட்டு முனையத்தில் பாதுகாப்புச் சோதனை நடவடிக்கைகளுக்காக கடந்த சனிக்கிழமை காலை சுமார் இரண்டு மணி நேரம் ஸ்தம்பித்ததால் பயணிகள் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

விமான நிலைய ஓய்வறையில் இருந்த பயணிகள் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதால் பெரும் நெரிசல் மற்றும் வரிசைகள் காணப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை கடையில் ஒரு தொழிலாளியால் கத்தரிக்கோல் கண்டு பிடிக்கப்பட்டதாக ஹொக்கைடோ விமான நிலையம் திங்களன்று அறிவித்தது. காணாமல் போன கத்தரிக்கோலும் இதுவும் ஒன்றுதான் என்பதை உறுதிப்படுத்தும் வரை அறிவிப்பை வெளியிடுவதை நிறுத்தி வைத்திருந்ததாகி அதிகாரிகள் விளக்கினர்.

ஹொக்கைடோ விமான நிலையத்தை சம்பவம் தொடர்பில் ஆராய்ந்து, இவ்வாறு மீண்டும் நடைபெறாமல் தடுக்குமாறு நிலம், உட்கட்டமைப்பு, போக்குவரத்து மற்றும் சுற்றுலா அமைச்சகம் கேட்டுக் கொண்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### செப்ரெம்பர் முதல் வாரத்தில்

# வாக்காளர் அட்டை விநியோகம் ஆரம்பம்

(கொழும்பு)

வாக்காளர் அட்டைகளின் அச்சிடல் பணிகள் இடம் பெற்று வருவதுடன் அடுத்த மாதம் முதல் வாரத்திலிருந்து வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்னாயக்க தெரிவித்தார்.

தேர்தல்கள் ஆணைக்குழு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார். அத்துடன் தற்போது வாக்குச் சீட்டுகளை அச்சிடும் பணிகள் அரச அச்சகத்தில் பாதுகாப்புடன் இடம்பெற்று வருவதாகவும், அரச அலுவலகங்களுக்கு அஞ்சல் வாக்குச் சீட்டுகளின் விநியோகம் எதிர்வரும் 26ஆம் திகதி ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது தேர்தல் வன்முறைகள் குறைந்த மட்டத்திலேயே இடம்பெறுகின்றன எனக் குறிப்பிட்ட அவர் இந்தச் சூழ்நிலையைத் தொடர்ந்து பேண உதவுமாறு அனைத்து வேட்பாளர்களிடமும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார். (நி-6)

### குழந்தைகளுக்கிடையே அதிகரிக்கும்

# வைரஸ் காய்ச்சல்கள்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் தற்போது பல வைரஸ் காய்ச்சல்கள் பரவி வருவதால் குழந்தைகளுக்கு இருமல், சளி அல்லது காய்ச்சல் இருந்தால் அவர்களை வீட்டிலேயே வைத்திருக்குமாறு விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் தீபால் பெரேரா கோரிக்கை விடுத் துள்ளார்.

குறிப்பாக மேல் சுவாசக் குழாயை அடிப்படையாக கொண்ட வைரஸ் காய்ச்சல் பரவி வருவதாகவும், இந்த நிலை மேலும் தீவிரமடையலாம் என்றும் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

எனவே அந்த அறி குறிகளைக் கொண்ட குழந்தைகள் முகமூடியை அணிய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இருமல் மற்றும் சுவாசிப்பதில் சிரமம் இருந்தால், இது குழந்தை பருவ ஆஸ்துமா காரணமாக இருக்கலாம் எகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி-6)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 180 | 200 | 160 | 100-150 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 190 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 150 | 150 | 300 | 150 | 250 |
| தக்காளி | 300 | 300 | 300 | 250 | 320 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 200 | 200 | 120-140 | 200 |
| கோவா | 350 | 320 | 300 | 350 | 400 |
| கரட் | 350 | 330 | 380 | 300 | 350 |
| பூசணி | 150 | 160 | 140 | 100 | 120 |
| புடோல் | 80 | 150 | 150 | 120 | 150 |
| வாழைக்காய் | 250 | 250 | 250 | 200-250 | 300 |
| சின்ன வெங்காயம் | 280 | 240 | 250-400 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 250 | 220 | 250 | 220 | 250 |
| பாகற்காய் | 400 | 300 | 400 | 300 | 300 |
| வெண்டக்காய் | 100 | 100 | 120 | 150-200 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 160 | 150 | 150 | 250 |
| பயற்றங்காய் | 300 | 330 | 200 | 200 | 160 |
| லீக்ஸ் | 420 | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 200 | 180 | 300 | 250 | 200 |
| கறிமிளகாய் | 600 | 650 | 700 | 450 | 600 |
| முருங்கைக்காய் | 300 | 150 | 180 | 40-60 | 150 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 450 | 600 |
| கத்தரி. தம்புள்ள | 150 | 150 | 180 | -- | 160 |
| கீரை – 1 பிடி | 100 | 100 | 50 | 50 | 100 |
| தேசிக்காய் | 500 | 500 | 500 | 300-350 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 130 | 60-100 | 60-110 | 80-130 |
| இராசவள்ளி | — | 900 | 650 | 600 | 800 |
| வெங்காயப்பூ | 200 | 200 | 250 | -- | 300 |
| முள்ளங்கி | 100 | 110 | 120 | 100 | 160 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 80 | 80 | 60 |
| வல்லாரை | 60 | 40 | 80 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 50 | 70 | 60 |

# இன்று ஒரு தகவல்

216



தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## ஆசையும் துன்பமும்

"அன்றைக்கு ஆசைப்பட்டேன் இன்றைக்கு அவஸ்தைப்படுகிறேன்!" என்கின்ற நினைப்பு ஒருவருக்கு வந்து விட்டது என்றால் ஆசாமி தேறி வருகிறார் என்று பொருள்.ஆசை தான் துன்பத்துக்குக் காரணம் என்கின்ற ஒரு பெரிய உண்மை அவருக்கு புரிய ஆரம்பித்து விட்டது என்று தானே அர்த்தம்.நேயர் ஒருவர் ஒரு நீதிக்கதையை எழுதி அனுப்பி வைத்திருக்கிறார்.அந்தக் கதை இந்த உண்மையை விளக்குவதற்குப் பொருத்தமாக இருக்கும் என்று நினைக்கின்றேன்.

ஒரு ஆள் சோளக் கொல்லையிலே காவல் காத்துக் கொண்டு இருந் தான். வழக்கமாக சோளக் கொல்லையிலே ஒரு பொம்மையை வைத்து காவல் காப்பது உண்டு.பொம்மை என்னத்திற்கு. நாமே போய் அங்கே இருந்து கொள்வோமே என்று நினைத்தான் போல இருக்கு.போனவன் கவனமாக இருந்து காவல் காக்க வேண்டும் அல்லவா? அப்படி செய்யவில்லை பொம்மை மாதிரியே இருந்து விட்டான். தூக்கம் வந்து விட்டது. தூங்கிப் போய்விட்டான்.

அந்த நேரம் பார்த்து அந்தக் கொல்லையை மேய்வதற்கு நந்தி ஒன்று வந்தது. எங்கே இருந்து கைலாயத்திலே இருந்து சிவபெருமானிடம் இருக்கும் அல்லவா? அந்த நந்தி. பூலோக சோளத்திலே அதற்கு என்னமோ அப்படி ஒரு ஆசை வந்தது. அது இஷ்டத்திற்கு மேய ஆரம்பித்துவிட்டது. இவன் என்னமோ தெரியவில்லை திடீர் என்று முழித்துக் கொண்டான். நந்தியைப் பார்த்தான். விரட்டிப் பிடிப்பதற்கு அருகில் ஓடினான்.

அது அதற்குள்ளே விருட் என்னு புறப்பட்டு ஆகாயத்திலே பறந்து போய்விட்டது. ஆகா ஏமாந்து போய்விட்டோமே என்று நினைச்சான் சரி. இது மறுபடியும் இங்கே வரும் அப்போது பார்த்துக் கொள்ளலாம் என்று நினைத்தான். மறுநாள் தூங்குவது மாதிரி பாவனை செய்து கொண்டு கிடந்தான். அவன் எதிர்பார்த்தது மாதிரியே நந்தி வந்தது. இவன் மெதுவாக பாம்பு மாதிரி நெளிந்து கொண்டே போனான். அருகில் போகும் சமயத்திலே அது இவனைப் பார்த்துவிட்டு விருட்டென்று மேலே கிளம்பி விட்டது. இவன் ஒரே தாவாக தாவி அதன் வாலைப் பிடித்துக் கொண்டான்.அது பறந்து போகிறது. இவன் தொங்கிக் கொண்டே போகின்றான். நேராக கைலாயத்திற்கு போய்ச் சேர்ந்தான். பார்வதி பரமசிவனைப் பார்த்தான்.

உங்கள் நந்தி என்னுடைய சோளக் கொல்லையை அழித்து எனக்கு பெரும் நட்டத்தை ஏற்படுத்தி விட்டதே இது நியாயமா? என்று கேட்டான். நியாயமே இல்லை என்று அவர்கள் ஒத்துக் கொண்டார்கள். அதற்கு நஷ்ட ஈடாக ஒரு பை நிறைய தங்கக் கட்டிகளைப் போட்டு அவனிடம் கொடுத்தார்கள். வாங்கிக் கொண்டான். அந்த நந்தியே பூலோகத்திற்கு ஒரு லிஃப்ட் கொடுத்தது. இவன் வந்து சேர்ந்தான் பேசாம சந்தோஷமா வாழ வேண்டியது தானே அதை விட்டுவிட்டான்.

அவ்வளவு தாராளமாக தங்கட்டியை அள்ளிக் கொடுத்தார்களே! அது நிஜமாகவே தங்கக் கட்டி தானா. இல்லை வேற ஏதாவதா என்கின்ற சந்தேகம் வந்து விட்டது அவனுக்கு. இவன் மனிதன் தானே. இயல்பாக வரக்கூடிய சந்தேகம். இங்கேயே யாராவது கொஞ்சம் தாராளமாக தர்மம் செய்தால் நாம் அவன் செய்த செயலை பாராட்டுவதில்லை.

இப்படி அள்ளி வீசுறானே அவன் எங்கே கொள்ளையடிச்சிருப்பான் என்கின்ற சந்தேகம் நமக்கு வரும். அப்படித்தான் அவனும் நினைத்தான். தங்கக் கட்டியை எடுத்துக் கொண்டு தன்னுடைய நண்பன் ஒருவனிடம் போனான். அவன் இது சம்பந்தமாக விவரம் தெரிந்தவன். வியாபாரம் செய்பவன்.

இது என்ன நிஜமான தங்கம் தானா? பார்த்துச்சொல் என்றான். அவன் சோதித்துப்பார்த்தான். நிஜமான தங்கம் தான். என்பதை அவன் புரிந்து கொண்டான். இருந்தாலும் அந்த உண்மையை இவனிடம் சொல்லவில்லை.

இதுதங்கம் இல்லை பித்தளை. இப்படி உன்னை ஏமாற்றியது யார்? என்று கேட்டான் மிகவும் தந்திரமாக இவன் அப்பாவித்தனமாக விபரத்தை சொன்னான். சரி என்று அவன் போய்விட்டான். மறுபடியும் கடவுளிடம் போய் இது நியாயமா? என்று கேட்க வேண்டும் என்று முடிவு செய்து விட்டான்.

அன்றைக்கு இரவு நந்தி வழக்கம் போல மேயவந்தது. இவன் ஓடிப்போய் அதன் வாலைப்பிடித்துக் கொண்டான்.நந்தி பறக்க ஆரம்பித்தது. இவன் வாலை பிடித்துக் கொண்டு தொங்கினான். காலிலே ஏதோ கப் என்று பிடித்த மாதிரி தெரிந்தது. அவனும் தொங்கிக் கொண்டே குனிந்து பார்த்தால் அவனுடைய நண்பன். அது தான் பித்தளை என்று சொன்னானே அவன் இவனது காலைப்பிடித்துக் கொண்டு தொங்கிக் கொண்டு வாறான்.

அவனுக்கு ஆசை வந்து விட்டது அது தான் தந்திரமாக இப்படி செய்து இருக்கின்றான். நடு வானத்தில் நந்தி போய்க்கொண்டு இருக்கின்றது. காலைப் பிடித்திருந்தவன் வாலை பிடித்து இருந்தவனைப் பார்த்து கேட்டான். அது சரி உனக்கு எவ்வளவு தங்கம் கொடுத்தார்கள் என்று. வாலை பிடித்திருந்தவன் இதோ இவ்வளவு இருக்கும் என்று இரண்டு கைகளையும் விரித்துக்காட்டினான். அவ்வளவுதான். அவர்கள் இரண்டு பேரும் வேகமாக பூலோகத்திற்கு வர ஆரம்பித்து விட்டார்கள்.

நந்திமேலே போய் விட்டது. அவர்கள் பொத்தென்று வந்து விழுந்தார்கள். இந்தக் கதை என்ன நீதியை சொல்லுகின்றது என்றால் வாலை பிடித்தவன் உண்மையை சந்தேகப்பட்டான். காலைப் பிடித்தவன் பேராசைப்பட்டான். உண்மையை சந்தேகப்பட்டவர்களுக்கும் பேராசைப் பட்டவர்களுக்கும் இது தான் கதி என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனக்குப் பேராசை கிடையாது என்றார் ஒரு அம்மா. அது எப்படி என்று கேட்டேன். ஒரு நாள் எங்கள் வீட்டுக்காரர் என்னுடைய மோதிரத்தை முழுங்கி விட்டார். அதற்காக நான் கொஞ்சம் கூட கவலைப்படவில்லை என்றார். எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அப்படியா என்றேன். ஆம் அது பித்தளை மோதிரம் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிர்ணய விலையின்மையால் தேங்கியுள்ள பூசணி, தர்ப்பூசணி

## செய்கையாளர்கள் கவலை



(அக்கராயன் )

கிளிநொச்சி கண்ணகைபுரத்தில் உற்பத்தி செய்யப்படும் பூசணி, தரப்பூசணி போன்றவற்றிற்கு நியாயமான விலையினை பெற்றுக் கொடுப்பதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணகைபுரம் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் மேட்டுப் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படும் கிராமங்களில் ஒன்றாக கண்ணகைபுரம் காணப்படுகின்றது.

இவ்வாண்டும் கண்ணகைபுரத்தில் பூசணி, தர்ப் பூசணி போன்றவை பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் உற்பத்திக்கான நியாயமான விலை கிடைக்கவில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் பூசணி, தர்ப்பூசணி பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டு அதனை விற்பனை செய்ய முடியாது விவசாயிகள் பெரும் நட்டங்களை அடைந்தனர்.

அதே நிலைமை தற்போதும் காணப்படுகின்றது. கண்ணகைபுரத்தில் இருந்து உற்பத்தி பொருட்களை வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்வதற்கான வழிகளை அதிகாரிகள் எடுக்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாகும்.

(நி-6-350)

### தெளிவூட்டல் கருத்தரங்கு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பில் அத்தாட்சிப்படுத்தும் அலுவலர்களாக கடமையாற்றவுள்ள முப் படையினர் மற்றும் பொலிஸாருக்கான தெளிவூட்டும்கலந்துரையாடல் நேற்று மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது .(நி-6)

### மீள குடிநீர் விநியோகம்

(அக்கராயன்)

அக்கராயன் மகா வித்தியாலயத்திற்கு முன்பாக உள்ள நீர்த்தாங்கியில் இருந்து விநியோகிக்கப்பட்ட குடிநீர் கடந்த மூன்று மாதங்களாக விநியோகிக்கப்படாத நிலையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட இடைக்கால நிர்வாகம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் தொட்டிகளை துப்பரவு செய்து கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் குடிநீரினை விநியோகித்து வருகின்றது. (நி-6-350)

### பஞ்சதள இராஜகோபுர அடிக்கல் நாட்டல்

(தருமபுரம்)

கிளிநொச்சி சித்தி விநாயகர் ஆலயத்திற்கு 61 அடி உயரமான பஞ்சதள இராஜ கோபுரத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு அடிக் கல்லினை நாட்டி வைத்தார். அத்துடன் பல அடியவர்களும் அடிக்கற்கள் நாட்டிவைத்தனர். (நி-6-316)



கமநல சேவைகள் நிலையங்களுக்கான தரப்படுத்தலில் நல்லூர் கமநல சேவை நிலையம் தேசியத்தில் 2 ஆம் இடத்தினையும் கரவெட்டி கமநல சேவை நிலையம் 3 ஆம் இடத்தினையும் பெற்றமைக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் கொழும்பு கமநல கேட்போர் கூட மண்டபத்தில் நடைபெற்றது.

(படம்: மகாலிங்கம்)

# அறநெறிக்கல்வி தொடர்பான செயலமர்வு

(முல்லைத்தீவு)

இந்து சமய அறநெறிக் கல்வி- ஓர் அறிமுகம் "பூரணத்துவமான ஆளுமைப் பண்பிற்கு அடிப்படை அறநெறிக் கல்வியே" எனும் தொனிப் பொருளில் முல்லைத்தீவு மாவட்ட அறநெறி ஆசிரியர்களுக்கான விசேட கருத்தரங்கு நேற்று முன்தினம் மாவட்ட செயலக பண்டார வன்னியன் மாநாட்டு மண்டபத்தில் மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமா மகேஸ்வரன் தலைமையில் நடை பெற்றது. இந்து சமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த ஆளுமைத் தன்மையை முழுமையாக வளர்ப்பதனை இலக்காகக் கொண்ட இந்து சமய அற நெறிப் பாட சாலைகளுக்கான புதிய பாடத் திட்டம் தொடர்பான அறிமுகக் கருத்தரங்காகவும் இது அமைந்திருந்தது.

தொண்ணூறு அறநெறி ஆசி ரியர்கள் குறித்த கருத்தரங்கில் கலந்து கொண்டதுடன் இதன் வளவாளராக அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி கலந்துகொண்டு தெளிவூட்டலை வழங்கினார். (நி-6)

# கற்பகத்தருவின் பெருமையும் வல்லமையும் எதிர்பார்ப்பும்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை,

(சென்றவாரத் தொடர்ச்சி...)

சுனாமி போன்ற பேரலைகளின் உள்வாங்கல்கள் நடைபெறும் எனச் சந்தேகிக்கும் இடங்களில் பனை மரத்தை அடுக்கு முறையில் நடவு செய்து மக்களின் உயிர்களைக் காப்பாற்றிக் கொள்வதோடு அவற்றை வளர்க்கும் பொறுப்பையும் அதிலிருந்தான பயன்பாட்டை பெறும் உரிமையையும் கரையோர மக்களுக்கே வழங்கி அவர்களின் முழுமையான ஒத்துழைப்பைப் பெறுவதோடு அவர்களின் வாழ்வாதாரத்தையும் அபிவிருத்தி செய்யும் வாய்ப்பாக மக்களை கவர்கின்ற தரத்தில் உயர்வான விரும்பிப் பயன்படுத்துகின்ற இன்னமும் உணவில் அன்றாட பாவனைப் பொருட்களில் பொதி செய்யப் பயன்படுத்தும் பொருட்களில் பனைசார் பொருட்கள் அவசியம் பயன்படுத்த வேண்டும் என்னும் நிலைமை ஏற்படுத்தப்படல் வேண்டும். தென்னையின் பயன்பாடுகளை மக்கள் தவிர்க்க முடியாதுள்ளது போல பனை மரத்தின் பயன்பாடுகளையும் தவிர்க்க முடியாதவாறான கண்டுபிடிப்புக்கள் மக்களிடையே எதிர்பார்க்கப்படுகின்றது. வழமையான ஆய்வுகளும் எதிர்கால அதீத பயன்பாடு மற்றும் உற்பத்தி வளர்ச்சிபற்றிய திட்டங்களற்ற செயற்பாடுகள் எந்த விதத்திலும் பனைசார் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப உதவிடாது. எமது நாட்டில் மட்டுமல்ல பிறநாடுகளில் குறிப்பாக புலம்பெயர்ந்தோர்களிடையே பனைசார் உற்பத்திப் பொருட்களில் கேள்வியதிகரிக்கும் நிலைக்கு எமது ஆய்வினூடான உற்பத்திகள் மேன்மையுறவேண்டும்.

பனைவளத்தைப் பற்றிய ஆய்வுகள் முழுமையாக முன்



னெடுக்கப்படவில்லை என்னும் ஆதங்கம் எமது மக்களிடமுண்டு. தற்போதுள்ள அபரிவிதமான விஞ்ஞானத் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பனைசார் பொருட்களை உற்பத்தி செய்வதும் அதனை மக்களுக்கு கிடைக்கசெய்வதும் மிகவும் முக்கியம். வடகிழக்கில் பனை சார் விவசாயத்தை இன்னும் பனைசார் தொழிற்றுறையை மேம்படுத்தினாலன்றி இதனது பயன்பாடு கிராமிய மட்டத்தில் வயதானவர்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட பயன்பாடாகவே மாறி விடும். பனைசார் தொழிற் துறையில் சமகால விஞ்ஞான தொழில்நுட்பம் முழுமையாக பயன்படுத்தப்பட்டால் அதனை பயன்படுத்துபவர்களது எண்ணிக்கையும் அதிகரிப்பதோடு அதன் பயன்பாடும் மக்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுவிடும். இளவயதினரை கவரும் புதிய உற்பத்திகள் மற்றும் பனைசார் தயாரிப்புகளுக்கு புத்தாய்வு கைகொடுக்க வேண்டும். உற்பத்திகளில் தொழில் நுட்ப பிரயோகம் அதீத நிலையில் இருக்கும் காலகட்டத்தில் அதே பயன்பாடு பனைசார் உற்பத்திப் பொருட்களிலும் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பனைசார் தொழில் துறையில் உருவாகும் கழிவுப் பொருட்கள் மற்றும் திரவங்களை உற்பத்திப் பொருட்களாக மாற்றும் தொழில் நுட்பம் உள்ளீக்கப்பட வேண்டும். குறிப்பாக சாராயவடி சாலையில் உருவாகும் கழிவு நீர் அதிகமான சேதனக் கழிவுகளை உக்கவைக்கும், நன்மைதரும் நுண்ணங்கிகளை கொண்டதாகவும் அதனது சுத்தக் கொள்ளளவு அதிகமாக இருப்பதனாலும் அதனை மதுவ தயாரிப்பிற்கு பயன்படுத்துவதோடு சிறந்த சேதனப் பசளை தயாரிப்பிற்கும் பயன்படுத்தலாம். இது போன்ற பல கழிவுப் பொருட்களை ஆய்வுக்குட்படுத்தி புதிய தரமான பொருட்களை உற்பத்தி செய்யும் நிலைக்கு உந்துதல் வேண்டும்.

இறுதியாக வடகிழக்கிலுள்ள பனை வளத்தின் தன்மை, அவற்றில் ஏற்படும் மாற்றங்கள், பனைவளத்தின் உற்பத்தித் திறன் மற்றும் உச்ச பயன்பாடு என்பன இன்னமும் ஆய்விலும் கண்காணிப்பிலும் உள்ளடக்கப்படல் அவசியம். வடகிழக்கின் அந்நியச்செலாவணி உச்ச தாவரமாக பனை வளத்தை மாற்றியமைத்தால் எமது பிரதேசம் நிச்சயமாக நாம் நினைத்த வல்லமை பெறும். எதற்கும் அஞ்சாது வளர்ந்திருக்கின்ற பல்லாண்டு வீரியமாக வளர்ந்திருக்கும் எமது வளத்தை இழந்துவிட்டு பின்னர் மீள் நடுகை என்பது உடனடி சாத்தியமில்லாதது. அபிவிருத்திஎன்னும் சாயலுக்குள் பனை வளத்தை அழித்து நடைபெறும் எந்த திட்டங்களையும் செயற்படுத்த முன் பலதடவை கலந்துரையாடி அதற்கான மாற்று வழிமுறைகள் கையாளப்படல் வேண்டும். சிறந்த நம்மூர் வெல்லப் பொருட்கள்,சேதன உரத் தயாரிப்பு, பொதி செய்யும் பொருட்கள், நிறைந்த ஊட்டச்சத்தான உணவு, சுவாத்தியமான இருப்பிடம், இயற்கையான வாழிடம், எரி பொருட்கள், சந்தையில் போட்டிபோட குடிவகைகள், அனைவரும் அருந்தும் உயர்ரக குளிர் மென்பானங்கள், மதுவ உற்பத்தி, உலக சந்தை விரும்பிப்பெறும் கைப்பணிப் பொருட்கள், வர்த்தகத்துறையில் போட்டியிடும் பயன்தரு பொருட்கள், சுற்றுலாப் பயணிகளை கவரும் பயன்பாட்டு வடிவங்கள், பரிசுப் பொருட்கள் என பல்வேறு பயன்தரு பொருட்களை தரும்.

தொழில் நுட்பங்கள் உருவாக்கப்பட்டு பனைசார் பொருளாதாரத்தில் நிச்சயமானதொரு தன்மையை உருவாக்குவதில் எமது வளத்தை, அடையாளத்தை பல்வகைமையை, காப்பாற்றிய பொறுப்பாளிகளாவோம். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 562





ஏன் என் குதிரையின் முகக் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்? விட்டுவிடு! நான் போகிறேன், அவசர காரியம் இருக்கிறது."

நான் வந்த காரியத்தை நீ இன்னும் கேட்கவில்லையே? சொன்னால்தானே கேட்கலாம்? இந்த முல்லையாற்றங்கரைக்கு ஓர் அதிசய சக்தி உண்டு. இங்கே யார் எதை விரும்புகிறார்களோ அது உடனே அவர்களுக்குச் சித்திக்கும். நான் ஒன்றும் விரும்பவில்லையே.

"அது பொய்! நீ யாரை நினைத்துக் கொண்டு உன் காதல் பாட்டைப் பாடினாயோ அவள் உன்னைப் பார்க்க விரும்புகிறாள்! நீ இஷ்டப்பட்டால் பார்க்கலாம். எப்போது? இன்றிரவே பார்க்கலாம். இது என்ன கதை?"

"கதையல்ல தம்பி! அதோ பார்!" என்று தேவராளன் சுட்டிக்காட்டினான். அவர்கள் சென்ற வழியில் சற்றுத் தூரத்தில் ஏதோ ஒரு பொருள் மங்கலாகத் தெரிந்தது. வந்தியத்தேவன் உற்றுப் பார்த்தான். அது ஒரு பல்லக்கு மூடு பல்லக்கு என்று அறிந்தான்.

ஆகா! அந்தப் பல்லக்கு! எங்கே பார்த்திருக்கிறோம்? ஏன், பழுவூர் இளையராணியின் பல்லக்கு அல்லவா அது? ஒரு வேளை அதற்குள்ளே நந்தினி இருக்கிறாளா, என்ன? அதைத் தெரிந்து கொள்ளும் ஆவலை அவனால் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

குதிரையை அந்தப் பல்லக்கின் அருகில் கொண்டு போய் நிறுத்தினான். பனைச் சித்திரம் போட்ட பல்லக்கில் மூடுதிரை தெரிந்தது. திரை அசைவது போலவும் இருந்தது. உடனே வந்தியத்தேவன் குதிரை மீதிருந்து கீழே குதித்தான்.

அதே கணத்தில் தேவராளன் தொண்டையிலிருந்து ஒரு விசித்திரமான சப்தம் வெளிவந்தது. அக்கம் பக்கத்திலிருந்து புதர்களின் மறைவிலிருந்து ஏழெட்டுப் பேர் திடும் திடும் என்று எழுந்து பாய்ந்து வந்தார்கள் வந்தியத்தேவன் மீது விழுந்தார்கள். அவனால் மீறி அசையவும் முடியாதபடி பிடித்துக் கொண்டார்கள்.

கால்களையும், கைகளையும் துணியினால் கட்டினார்கள். கண்ணையும் ஒருவன் கட்டினான் உடைவாளை ஒருவன் பலவந்தமாக எடுத்துக் கொண்டான். பிறகு வந்தியத்தேவனை அந்தப் பல்லக்கினுள்ளே தூக்கிப் போட்டார்கள். சிலர் உடனே பல்லக்கைத் தூக்கிக் கொண்டு விரைந்து நடந்தார்கள். மற்றவர்கள் முன்னும் பின்னும் சென்றார்கள். தேவராளன் முன்னால் வழிகாட்டிக் கொண்டு சென்றான். ஒருவன் குதிரையைப் பிடித்துக்கொண்டு நடந்தான்.

இவ்வளவும் அதிவிரைவில் நடந்து விட்டன. 'கண் மூடித் திறக்கும் நேரத்தில்' என்று சொல்வதும் மிகையாகாது. வந்தியத்தேவன் தன்னைப் பலர் வந்து ஏக காலத்தில் தாக்கியதும் திகைத்துப் போய்விட்டான். அத்தகைய தாக்குதலை அவன் எதிர்பார்க்கவேயில்லை. பல்லக்கில் அவனைத் தூக்கிப் போட்டுப் பல்லக்கு நகர ஆரம்பித்தவரையில் அவனால் எதுவும் சிந்திக்கவும் முடியவில்லை. என்ன நடக்கிறதென்று தெரிந்து கொள்ளவும் முடியவில்லை.

ஆனால் பல்லக்கு நகர ஆரம்பித்ததும் சிறிது சிறிதாக மனம் தெளிவடைந்தது. கண்ணின் கட்டுச் சுலபமாக நழுவிவிட்டது. கட்டியிருந்த கைகளினால் பல்லக்கின் திரையை விலக்கிக் கொண்டு பார்த்தான்.

(தொடரும்)





# சிறுவர் அரங்கம்

## தொழில் கற்று முன்னேறினான்

இரும்பு வியாபாரி ஒருவருக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். அவர்கள் இருவரும் தந்தைக்கு உதவியாக கடையில் இருந்தனர்.

வியாபாரிக்கு வயதாகி விட்டது. எனவே தன்னுடைய சொத்து முழுவதையும் இளைய மகனுக்கே கொடுத்து விட விரும்பினார். ஏன் என்றால், இளைய மகனிடம் மிகுந்த பிரியம் கொண்டிருந்தார்.

அதை அறிந்த வியாபாரியின் மனைவி கணவனிடம், "இருவருமே நம்முடைய பிள்ளைகள் தானே சொத்து இருவருக்கும் பொது அல்லவா? இளையவனுக்கு எல்லாவற்றையும் கொடுத்து விட்டல், மூத்தவன் என்ன செய்வான்? இருவருக்கும் சமமாகக் கொடுப்பதே நியாயம் என்று வாதாடினாள்.

அதற்கு வியாபாரி நான் தேடிய சொத்தை என் விருப்பப்படி இளையவனுக்குக் கொடுக்கவே விரும்புகிறேன். இந்தச் செய்தியை நம் மகன்களுக்குத் தெரிவிக்கக் கூடாது என மனைவியிடம் எச்சரித்தார்.

மனைவி, தன் வேண்டுகோளை கணவன் ஏற்காததால் மிகவும் வருந்தி அழுது கொண்டிருந்தாள்.

அப்பொழுது, குடும்ப நண்பர் ஒருவர் வந்தார். வியாபாரியின் மனைவியைப் பார்த்து "ஏன் அழுகிறீர்கள்?" என்று கேட்டார். கணவனின் எண்ணத்தைக் கூறி வருந்தினார் மனைவி.

மேலும், "என்னிடம் தனியாக எதுவுமே இல்லை. இருந்தால், மூத்தவனுக்குக் கொடுக்கலாம். என் துயரத்தைப் போக்க வழி எதுவும் தெரியவில்லை" என்று புலம்பினாள்.

"அம்மா! நீங்கள் கலங்க வேண்டாம். துன்பம் தீர வழி ஒன்று உண்டு. அதாவது இளையவனுக்கே சொத்து முழுவதும் கிடைக்கப் போகிறது. மூத்தவனுக்கு எதுவும் இல்லை என்பதை இப்பொழுதே அவர்களிடம் தெரிவித்துவிடுங்கள் பின்னால் இருவரும் சமமாகி விடக்கூடும் என்று கூறிச் சென்றார் உறவினர்.

மகன்கள் இருவரிடமும் விவரத்தைக் கூறினாள் தாய். இளையவன், "சொத்து முழுவதும் தனக்குக் கிடைக்கப் போகிறது. அதில் அண்ணனுக்கு ஏன் பங்கு கொடுக்க வேண்டும் என்ற எணணத்தில் கர்வமாக இருந்தான். மேலும் தொழிலைக் கவனிக்கவில்லை.

சொத்தில் தனக்கு பங்கு இல்லை என்று தாய் கூறியதும், மூத்தவன் அப்பொழுதே வீட்டைவிட்டுப் புறப்பட்டு, அயலூர் சென்றான். அங்கே தொழில் பயிற்சி பெற்றான்.

வியாபாரி இறந்து போனார். இளையவன், தொழில் முறை தெரியாமல், சொத்து முழுவதையும் இழந்து, உணவுக்கே வழியில்லாமல் திண்டாடலானான். மூத்தவன் தொழில் பயிற்சி பெற்று, பணக்காரன் ஆனான். தாயையும் ஆதரித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுகளை நாம் அனுமதிக்கும் போதே அவை நம்மை தடம் மாற்றி விடுகின்றன.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கின் வீதிப் போக்குவரத்தை ஆளுநர் பார்வையிட வேண்டும்

அரசியல் பற்றி எழுதி எந்தப் பயனும் இல்லை என்றாயிற்று.

சரி, ஒற்றுமையையாவது வலியுறுத்துவோமென்றால், நாளுக்கு நாள் நம்மிடம் பிரிவினையே வளர்ந்து வருகிறது.

பொலிஸ் சேவை பற்றிக் கூறலாம் என நினைத்தால், கள்ளக்காணி தொடக்கம் கசிப்பு வரை பொலிஸாரின் புண்ணியத்தில் தான் ஓடுகிறதாம்.

என்ன செய்வது மௌனமாய் இருப்பது தான் நோய்க்கான நிவாரணி என்றிருந்தால், ஊடக தர்மம் அதைக் குற்ற உணர்வாக்குகிறது.

ஆக, மக்களுக்கு நன்மை பயப்பதை எழுதுவதுதான் அறம் என்றுணர்ந்தோம்.

அந்தவகையில் எங்கள் வட மாகாணத்தில் வீதிப் போக்குவரத்து மிக மோசமாகி வருவது அனைவரும் அறிந்ததே.

ஆம், அளவுக்கு அதிகமான வாகனங்கள் வடபகுதிக்குள் பயணிக்கின்றன. அதிலும் மோட்டார் சைக்கிள்களின் பெருக்கம் சொல்லி மாளா.

இந்நிலையில் வாகன நெருக்கடியால் வீதிகளில் பயணிப்போர் படும் அவலம் சொல்லுந்தரமன்று.

அதிலும் குறிப்பாக, யாழ்ப்பாண நகரமும் அதை அண்மித்த வீதிகளிலும் போக்குவரத்து நெருசல் இடைவெளியின்றிக் காணப்படுகிறது.

ஏதோ தெய்வாதீனமாக விபத்துக்கள் தவிர்க்கப்படுகின்றனவேயன்றி, மற்றும்படி போக்குவரத்து விதிமுறைகளைக் கடைப்பிடிப்பதனாலும் போக்குவரத்துப் பொலிஸார் சேவையில் இருப்பதனாலும் வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்பட்டிருப்பதாலும் வீதி விபத்துக்கள் தவிர்க்கப்படுவதாக யாரும் நினைத்து விடக்கூடாது.

உண்மையைக் கூறப்போனால், எங்கள் வடபகுதியில் வீதிப் போக்குவரத்தை ஒழுங்குபடுத்துகின்ற வேலைத்திட்டம் அறவே இல்லை எனலாம்.

ஆம், பாடசாலை நாட்களில் யாழ்.நகரத்திலுள்ள பிரதான கல்லூரிகளுக்கு முன்னால் நின்று போக்குவரத்து பொலிஸார் ஒழுங்குபடுத்தலில் ஈடுபடுகின்றனர்.

இந்தப் பணிக்காக அவர்கள் செலவிடுகின்ற ஆகக்கூடிய நேரம் காலையும் பிற்பகலுமாகச் சேர்த்து வெறும் ஒன்றரை மணித்தியாலங்கள் மட்டுமே.

மற்றும்படி, அரச அலுவலகங்களுக்குச் செல்கின்ற வேளைகளிலும் அரச அலுவலகங்கள் நிறைவுறுகின்ற வேளைகளிலும் போக்குவரத்துப் பொலிஸார் எந்த வீதியிலும் நின்று போக்குவரத்தை ஒழுங்குபடுத்துவது கிடையாது.

இவ்வாறான சூழ்நிலையில், போக்குவரத்து நெருக்கடி காரணமாக விபத்துக்கள் நடப்பதும் வாகனங்கள் சேதமாவதும் பின்னர் அது தொடர்பில் பொலிஸார் வழக்குப் பதிவு செய்து வாகனங்களை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைப்பதுமான சோலிகள் வந்து சேருகின்றன.

உண்மையில் இவை அனைத்தும் பொது மக்களுக்கு மன உளைச்சலை ஏற்படுத்துவதுடன் அவர்களின் பொருளாதாரத்திலும் கணிசமான தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன.

எனவே, வடக்கு மாகாண ஆளுநர் ஒரு முறையேனும் வடபகுதியில் உள்ள வீதிப் போக்குவரத்தைப் பார்வையிட வேண்டும்.

அவ்வாறு பார்வையிடுவதன் மூலம், எங்கெங்கு பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். எங்கெங்கு வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்பட வேண்டும் என்ற தீர்மானங்களை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த முடியும்.

இதைச் செய்வதன்மூலம் எம் மக்கள்; உயிர்ப் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு நன்மைகளைப் பெறுவர்.

# நிறைவேற்று அதிகாரத்தை எப்படி நீக்கப்போகிறீர்கள்

## தெளிவுபடுத்துங்கள் என்கிறார் அலி சப்ரி

*(கொழும்பு)*

நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்கவிரும்பும் ஜனாதிபதி வேட்பாளர்கள் அதனை எவ்வாறு முன்னெடுக்கப்போகின்றனர் என்ற திட்டத்தை முன்வைக்கவேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ள வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி இல்லையென்றால் தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால் வாக்காளர்களைக் குழப்பவேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவரும் நிலையில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதிமுறையை நீக்குவது தொடர்பில் புதிய வேண்டுகோள்களும் வாக்குறுதிகளும் வெளியாகியுள்ளன. இது கடந்த காலங்களில் வழங்கப்பட்டது. ஆனால் ஒருபோதும் நிறைவேற்றப்படாத வாக்குறுதி.

சந்திரிகா குமாரதுங்க போன்ற தலைவர்கள் தங்களின் பதவிக்காலம் முடிவடையும் வரை இதனைப் பிற்போட்டனர். அதேவேளை மைத்திரி பாலசிறிசேன நீதிமன்றத்தின் உத்தரவு காரணமாகவே தான் நிறைவேற்றதிகாரம் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை எனத் தெரிவித்திருந்தார். உண்மையான நிலைவரம் என்னவென்றால், நிறைவேற்றதிகார ஜனாதிபதி முறையை நீக்குவது எங்களின் அரசமைப்பின் சில பிரிவுகளின் மீது நேரடியான தாக்கத்தைச் செலுத்துகின்றது.

சர்வ ஜனவாக்கெடுப்பு இல்லாமல் இந்த மாற்றத்தை மேற்கொள்ளமுடியாது என உயர்நீதிமன்றம் தெளிவாக தெரிவித்துள்ளது.

இது வெறுமனே அரசியல் உறுதிப்பாட்டுடன் தொடர்புபட்ட விடயம் மாத்திரமில்லை, இது அரசியலமைப்புத் தேவை. ஆகவே நீங்கள் இந்த வாக்குறுதி குறித்து உண்மையான அர்ப்பணிப்பைக் கொண்டிருக்கின்றீர்கள் என்றால், நாங்கள் நடைமுறைகளைப் பற்றிப் பேசுவோம்.

இது குறித்த சர்வ ஜனவாக்கெடுப்பு எப்போது இடம்பெறும்? உங்களின் பதவிக் காலம் முடிவடைந்த பின்னரே இந்த விடயத்திற்கு தீர்வைக் காண்பதற்கு நீங்கள் திட்டமிட்டுள்ளீர்களா? இலங்கை மக்களிற்கு காலக்கெடு மற்றும் செயல்முறை பற்றிய தெளிவான விடயங்கள் அவசியம்.

நமது ஜனநாயகம் வெளிப்படைத் தன்மை, மற்றும் நேர்மையால் செழிப்படைகின்றது. நிறைவேற்றதிகார முறை நீக்கம் என்ற மாற்றத்தை நீங்கள் உண்மையிலேயே செய்ய விரும்பினால் அதனை எவ்வாறு முன்னெடுக்க விரும்புகின்றீர்கள் என்ற வழிகாட்டுதல்களை வழங்கவேண்டியது உங்கள் கடமை.

இல்லையென்றால் தெளிவான திட்டம் இல்லாத தெளிவற்ற வாக்குறுதிகளால் வாக்காளர்களைக் குழப்பவேண்டாம் என்றார். (ந-7)

# பெரமுன உறுப்பினர்கள் 17 பேர் ரணிலுக்கு ஆதரவு

*(கொழும்பு)*

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர்கள் 17 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்து, அவருடன் இணைந்து கொண்டுள்ளனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசத்துடனான சந்திப்பின் பின்னர் அவர்கள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர்.

இதன்போது, ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றிக்காக தம்மை அர்ப்பணிப்பதாக பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய மாவட்ட அமைப்பாளர்களுக்கான நியமனக் கடிதங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தவில் இடம்பெற்றது.

அநுராதபுர மாவட்ட அமைப்பாளர்களாக இஷாக் ரஹ்மான் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பீ. ஹெறிசன், டபிள்யூ. பி. ஏகநாயக்க ஆகியோர் கடிதங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன், முன்னர் ஜாதிக ஹெல உறுமயவை பிரதிநிதித்துவப்படுத்திய நிஷாந்த ஸ்ரீ வர்ணசிங்கவுக்கு ஐ.தே. கட்சியின் கொழும்பு மாவட்ட அமைப்பாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

மேலும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த முத்துஹெட்டிகம காலி மாவட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளராக நியமிக்கப்பட்டதுடன் கட்சியின் சிரேஷ்ட தலைவர்களின் பங்களிப்புடன் 295 பேருக்கு மாவட்ட மற்றும் பிராந்திய அமைப்பாளர் பதவிகள் வழங்கப்பட்டன. (ந-7)

# தேர்தல் திருத்தச் சட்டமூலம் செப். 3 இல் நிறைவேறும்

மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தை எதிர்வரும் செப்ரெம்பர் 3 ஆம் திகதி 3 ஆம் வாசிப்புக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அன்றைய தினமே நிறைவேற்றுவதென சட்டவாக்க நிலையியல் குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சட்டவாக்க நிலையியல் குழு நேற்று பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ தலைமையில் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் கூடியது. இதில் அக்குழுவின் உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், மனோகணேசன், கோவிந்தன் கருணாகரம் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

அதில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனால் கடந்த 6 ஆம் திகதி 2 ஆம் வாசிப்புக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட மாகாணசபைத் தேர்தல் திருத்தச் சட்ட மூலத்தில் உயர் நீதிமன்றத்தினால் வலியுறுத்தப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் நிலையில், அதனை 3 ஆம் வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பது குறித்து ஆராயப்பட்டது.

அதற்கமைய அச்சட்டமூலத்தை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3 ஆம் திகதி மூன்றாம் வாசிப்புக்காகப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து, அன்றைய தினமே அதனை நிறைவேற்றுவதற்குச் சட்டவாக்க நிலையியல் குழுவில் தீர்மானிக்கப்பட்டது. (ந-7)

# சீரற்ற வானிலையால் 929 குடும்பங்கள் பாதிப்பு

## மண்சரிவு அபாய எச்சரிக்கையும் விடுப்பு

*(கொழும்பு)*

நாட்டில் நிலவும் சீரற்ற வானிலையால் களுத்துறை, புத்தளம் மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் 929 குடும்பங்களைச் சேர்ந்த 3,243 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

சீரற்ற வானிலையினால் இதுவரை இருவர் காயமடைந்துள்ளதுடன், 27 வீடுகளுக்கு பகுதியளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

அதேவேளை, களுத்துறை மாவட்டத்தின் மதுராவளைப்பிரதேச செயலகப் பிரிவில் வரகாகொட கலவெல்லவ வீதி, அலமோதர - பரகஸ்தோட்ட வீதி, மில்லனியப் பிரதேச செயலகப் பிரிவின் பனாகொட - நர்துபான வீதி, புலத்சிங்கல - மொல்காவ வீதி, செங்கலத்தலை வீதி, உப்பலத்தீவில் உள்ள வீதிகள் மற்றும் பாலிந்தநுவர பிரதேச செயலகப் பிரிவில் பதுரலிய - பெனிகல வீதி ஆகியன வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

களுத்துறை மற்றும் இரத்தினபுரி மாவட்டங்களில் உள்ள பல பிரதேச செயலகங்களுக்கும் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் மண்சரிவு அபாயம் காரணமாக சிவப்பு அறிவித்தலைவெளியிட்டுள்ளது.

மேலும் கொழும்பு, காலி ஆகிய மாவட்டங்களுக்கு மண்சரிவு எச்சரிக்கை அறிவிப்பு நீடிக்கப்பட்டுள்ளது.

மேல் மற்றும் சப்ரகமுவ மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அதிகளவான பலத்த மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரித்துள்ளது. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தோற்றுக் கொண்டிருக்கும் அரசியல் தீர்வு பேச்சுவார்த்தைகளும் தோற்காத அரசியல் தீர்வு யோசனைகளும்


**கலாநிதி க. தவலிங்கம்**
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.


03

அரசமைப்பு சீர்திருத்தம் பற்றி ஆராய்வதற்காக பிரிட்டிஷ் அரசினால் நியமிக்கப்பட்ட சோல்பரி ஆணைக்குழு 1944 இல் இலங்கைக்கு வந்த போது, அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்ட ஒரு கட்டமைவையோ, அல்லது ஒரு சமஷ்டி அமைப்பையோ நாடு கொண்டிருக்க வேண்டும் என்ற எந்தத் தீர்க்கமான முன்மொழிவும் தமிழ்த் தலைவர்கள் உட்பட எந்த அமைப்பினாலும் முன்வைக்கப்படவில்லை என்று கூறப்படுகிறது. அதேபோல் சோல்பரி ஆணைக்குழுவும் சுயாட்சி பற்றி எந்தவொரு பரிந்துரையும் செய்யவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

சமஷ்டி ஆட்சிமுறைச் சிந்தனையை தமிழரசுக் கட்சியின் கொள்கையாக எடுத்துக்கொண்ட பின்பே சமஷ்டிவாதம் சர்ச்சைக்குரியதாக மாறியது.

1950களில் சமஷ்டி ஆட்சி முறைச் சிந்தனையை தமிழரசுக் கட்சியின் கொள்கையாக எடுத்துக்கொண்ட பின்பே சமஷ்டிவாதம் சர்ச்சைக்குரியதாகவும் உணர்ச்சி பூர்வமானதாகவும் மாறியது. இன்று தமிழர் சிங்களவர்களுக்கிடையே மட்டுமல்ல தமிழர்களுக்கிடையேயும் சர்ச்சைக்குரியதாக மாறியுள்ளது.

### மலைநாட்டுச் சிங்களத் தலைவர்களின் சமஷ்டி ஆட்சிக் கோரிக்கை - 1927

இலங்கைக்குப் பொருத்தமான ஆட்சி முறையொன்றை சிபாரிசு செய்வதற்கென டொனமூர் ஆணைக்குழு 1927இல் நியமனஞ் செய்யப்பட்டது. இந்த ஆணைக்குழுவின் முன் ஆஜராகி கருத்துத் தெரிவித்த மலைநாட்டுச் சிங்களப் பிரதானிகள், தாம் கரையோரச் சிங்களவர்களிலும் பார்க்க வேறுபட்ட ஒரு மேலான குடியினராக இருந்து வருவதனால் தமது தனித்துவமான அடையாளத்தை நிலைநிறுத்திக் கொள்ளும் பொருட்டு ஒரு சமஷ்டி ஆட்சி முறையை உருவாக்குமாறு கேட்டுக் கொண்டனர்.

மலைநாட்டுத் தலைவர்கள் இந்த விதத்திலான ஒரு கருத்தினைத் தெரிவிப்பதற்கு வழிகோலிய மூன்று காரணங்கள் இருந்து வருகின்றன. பொருளாதார நெருக்கடிகள் காரணமாக கரையோரச் சிங்களவர்களும், தமிழர்களும், முஸ்லீம்களும், சனச்செறிவு மிகுந்த கரையோரப் பிரதேசங்களிலிருந்து வெளியேறி மலைநாட்டுக்கும் ஏனைய பிரதேசங்களிலிருந்து வெளியேறி மலைநாட்டுக்கும், பிற பிரதேசங்களுக்கும் குடிபெயர்ந்தனர். இது முதலாவது காரணமாகும்.

இரண்டாவது காரணம் : அவ்விதம் குடிபெயர்ந்து சென்றவர்களால் கல்வியறிவில் மிகவும் பின்தங்கியநிலையிலிருந்து வந்த மலைநாட்டைச் சேர்ந்த அப்பாவிக் கிராம மக்களை மிக எளிதில் சுரண்டக் கூடிய ஒரு சூழ்நிலை நிலவியது.

தமக்குப் பொறுப்புக் கூற வேண்டிய அரசாங்கமொன்றை ஸ்தாபித்துக் கொள்வதற்கான இயக்கத்தை ஆரம்பித்தவர்களில் பெரும்பாலானவர்கள் கரையோரச் சிங்களவர்களாக இருந்து வந்தமை மூன்றாவது காரணமாகும்.

கரையோரச் சிங்களவர்களின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டால் என்றோ ஒரு நாள் தமது சொந்த நாட்டில் தாம் அந்நியப்படுத்தப்பட முடியும் என்ற அச்ச உணர்வும் மலைநாட்டுச் சிங்களவர்கள் மத்தியில் நிலவி வந்தது. இவ்விதம் வந்து குடியேறியவர்கள் மிகவும் தந்திரமான முறையில் தமது காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் சாமர்த்தியத்தைக் கொண்டிருந்தனர்.

வந்தேறு குடிகளின் பிடியிலிருந்து தப்பிக் கொள்ளும் அளவுக்கு ஆற்றல் கொண்டவர்களாக மலைநாட்டு மக்கள் இருந்து வரவில்லை. மறுபுறத்தில், மலைநாட்டிலிருந்து அரசாங்க சபைக்கு தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகள் மலைநாட்டவர்களாக இருந்து வந்த போதிலும் அவர்களின் எண்ணிக்கை கரையோரப் பிரதேசங்களிலிருந்து தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளின் எண்ணிக்கையிலும் பார்க்க பெருமளவுக்குக் குறைவாக இருந்து வந்தது.

கரையோரச் சிங்களவர்களுக்கும், இலங்கைத் தமிழர்களுக்கும் இடையில் ஓர் ஒப்பந்தம் நிறைவேற்றப்படுவதனையும் அதற்கூடாக மலைநாட்டுப் பிரதேசத்தின் அரசியல் அதிகாரம் இந்த இரு பிரதான குழுக்களின் கைகளில் போய்ச் சேருவதனையும் மலைநாட்டு மக்களின் உரிமைகள் மற்றும் தனித்தன்மை என்பன ஒழிக்கப்படுவதனையும் எந்த விதத்திலும் தடுத்துக் கொள்ள முடியாது போய்விடுமென அவர்கள் கருதினர்.

நாட்டில் முன்னெடுக்கப்பட்ட அரசியல் சீர்திருத்த இயக்கங்களை மலைநாட்டுச் சிங்களவர்கள் சந்தேகக் கண்கொண்டு நோக்கினர். இந்த இயக்கங்களுக்கூடாக பெருமளவுக்கு முன்னேறியிருக்கும் கரையோரச் சமூகங்களுக்கு மத்தியில் தமது தனித்[illegible] முடியும் என்றும், அதிகரித்து வரும் கரையோரச் சமூகத்தினரின் செல்வாக்கிற்கு தாம் இரையாக வேண்டியிருக்குமென்றும் அவர்கள் சிந்திக்கத் தலைப்பட்டனர்.

இத்தகைய நெருக்கடிகளை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு இலங்கை மூன்று சுயாட்சி அலகுகளாகப் பிரிக்கப்பட வேண்டுமென்ற யோசனையை மலைநாட்டுத் தலைவர்கள் முன்வைத்தனர். அவை யாவன:

(1) தமிழர்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வரும் வடக்கு, கிழக்கு மாகாணங்கள்.
(2) மலைநாட்டு மாகாணங்கள்
(3) கரையோரச் சிங்களவர்கள் செறிவாக வாழ்ந்து வரும் தென் மற்றும் மேல் மாகாணங்கள்.

இந்த முறையின் பிரகாரம், இம்மூன்று சமூகப் பிரிவினருக்கும் சுயாட்சியுடன் கூடிய ஓர் அரசாங்கம் கிடைக்கும். அதற்கூடாக மலைநாட்டவர்களின் தேசிய மேன்மை பாதுகாக்கப்படுவது மட்டுமன்றி, தெற்கிலிருந்தும் வடக்கிலிருந்தும் அவர்கள் எதிர்கொள்ள நேரிடும் அச்சுறுத்தல்கள் குறித்த அச்சமும் போக்கப்பட்டு விடும்.

முழு நாட்டுக்கும் நன்மையை எடுத்துவரக் கூடிய விடயங்களைச் செயற்படுத்துவதற்கும் இந்த மூன்று அரசாங்கங்களையும் இணைத்து ஒரு சமஷ்டி அரசாங்கத்தை அமைத்துக் கொள்ள முடியும். அப்பொழுது எந்த ஒரு சமூகப்பிரிவினாலும் மற்றொரு சமூகப் பிரிவை அடக்கியாள முடியாத நிலை தோன்றும்.

இவ்வாறு டொனமூர் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பித்த தமது அறிக்கையில் மலைநாட்டுச் சிங்களத் தலைவர்கள் கூறியிருந்தனர்.

### சமஷ்டி பற்றி இலங்கை தேசிய சங்கத்தின் யோசனைகள் - 1944

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் இலங்கை தேசியச் சங்கம் இணைந்து இலங்கை தொழிற் சங்க சம்மேளனத்தின் ஓர் ஆவணமாக 1944.10.02இல் யோசனைகள் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் கூறப்பட்டிருந்தவை.

- இலங்கை மக்களின் சமத்துவத்தையும் இறைமையையும் அங்கீகரித்தல்
- சிங்கள தமிழ் தேசிய இனங்களுக்கு சுதந்திரமும் சுயநிர்ணய உரிமையும் உண்டு என்பதை அங்கீகரித்தல்
- மேற்படி தேசிய இனங்கள் தமக்கென தனியான அரசை நிறுவ விரும்பினால் அதற்கான உரிமையை அங்கீகரித்தல்
- இரு தேசிய இனங்களினதும் மரபு வழித்தாயகம், மொழி, பொருளாதார வாழ்வு, கலாசாரம், உளவியல் பாங்கு என்பவற்றை அங்கீகரித்தல்.
- சிறுபான்மையினரின், அரசியல், சமூக, பொருளாதார, கலாசார, கல்வி, மற்றும் மொழி உரிமைகளை சட்டரீதியாக அங்கீகரித்தல்
- சாதி, இனம், மற்றும் சமூக அந்தஸ்து என்பவற்றிற்கு அமைய சலுகைகள் அநீதிகள் என்பவற்றை சட்டரீதியாக இல்லாதொழித்தல்
- மேற்கூறியவற்றை மீறுவோருக்கு தண்டனை விதிக்க வேண்டும்.

(இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி 1944இல் வெளியிட்ட பிரகடனமும் இதற்குச் சமமானது)

### இலங்கை தேசிய சங்கம் பற்றி....

இலங்கை தேசிய சங்கம் (Ceylon National Congress, CNC) என்பது இலங்கையில் 1919 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட ஒரு தேசியவாத அரசியல் கட்சியாகும். இலங்கை பிரித்தானிய ஆட்சியின் கீழ் இருந்த போது, தேசியவாதம் எழுச்சியுற்றிருந்த காலகட்டத்தில் நிறுவப்பட்டது. இக்கட்சி 1948 ஆம் ஆண்டில் இலங்கை விடுதலை பெறுவதற்கு மிகவும் முக்கிய பங்கு வகித்திருந்தது. ஆரம்பத்தில் சேர். பொன்னம்பலம் அருணாசலம் இதன் நிறுவனத் தலைவராக இருந்து செயல்பட்டார்.

இலங்கையின் முக்கிய தேசிய தலைவர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு தலைவராகவும் இவர் விளங்கினார். இவர் இந்த நிலைக்கு உயர்த்தப்பட்டமைக்கு இவரது கல்வியறிவு, திறமை என்பவற்றோடு இவரது சகோதரர் சேர்.பொன். இராமநாதன் சிங்களத் தலைவர்களது விடுதலைக் காற்றிய தொண்டே முக்கியமானது.

இதன்படி இலங்கை தேசிய சங்கம் இன ஒற்றுமையினதும் தேசிய ஒருமைப்பாட்டு நிலையினதும் ஒரு சின்னமாகக் காணப்பட்டது. சிறுபான்மை இனத்தின் தலைவர் தேசிய சங்கத்தின் தலைவராக நியமிக்கப்பட்டமை இலங்கையின் தேசிய ஒருமைப்பாடு வலுவடைந்து வந்துள்ளது என்பதைக் காட்டியதோடு மறுபுறமாக அது பிரித்தானியருக்கு எதிராக இலங்கை மக்கள் அனைவரும் போராட ஒன்றுபட்டுள்ளனர் என்பதையும் வெளிக்காட்டலாயிற்று.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரடி விவாதத்...

மூலம் அறிவித்துள்ளார்.

அதில் ஜனாதிபதித் தேர்தலின் போது நாம் ஒவ்வொருவரும் நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கும் கொள்கைகள் பற்றிய ஆக்கபூர்வமான உரையாடலைக் காண இலங்கையர்களுக்கு இந்தக் களம் ஒரு புதுமையான அனுபவத்தை வழங்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்த விவாதத்தில் எனது சக வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்ஷ மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் ஆகியோர் கலந்து கொண்டு இந்த வரலாற்று நிகழ்வை யதார்த்தமாக்குவார்கள் என நான் நம்புகிறேன் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## அரகலயவின்...

கொழும்பு - மயூராபதி ஸ்ரீ பத்ரகாளி அம்மன் கோவிலுக்குச் சென்று சமய வழிபாடுகளில் ஈடுபட்டதைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

"கொள்கைப் பிரச்சினைகளின் அடிப்படையில் தேர்தலில் போட்டியிடுவதை நாங்கள் விரும்பவில்லை. ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஒரே நம்பிக்கை பொதுமக்களின் நம்பிக்கையை நிறைவேற்றுவதே.

சிஸ்டம் மாற வேண்டும் எனக் கூறிய இளைஞர்கள் இன்னும் வீதியில்தான் இருக்கிறார்கள். அரசியல் ஆதாயங்களுக்காக அதனைப் பயன்படுத்திய வர்களே கட்சிகளாகப் பிரிந்துள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணியாளர்களால் அது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. முன்னாள் போராட்டக்காரர்களில் சிலர் அவருடன் உள்ளனர். அதிலும் பலர் ஜனாதிபதி செயலகத்தில் பணி புரிகின்றனர்.

எனவே அவரே போராட்டத்தின் நிறுவுனரும் ஆவார். அதனால்தான் நாம் ஒருவரையொருவர் நோக்கி விரல் நீட்டுவதில்லை. புத்திசாலித்தனமாகவும், எதிர்காலத்திற்கான உண்மையான திட்டத்துடன் முடிவுகளை எடுப்போம்" என்றார். (ந-7)

## புதையல்...

படும் ஸ்கானர் கருவி உட்பட மண் அகழ்வதற்கான உபகரணங்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

வவுனியா இராணுவப்புலனாய்வுப்பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைவாக ஓமந்தைப் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் நேற்று வவுனியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் பட்டதுடன், சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

## பாராளுமன்றத்...

பாராளுமன்றத்தில் உள்ள திருடர்கள் அகற்றப்பட வேண்டும் எனவும், ஊழல் மோசடிகளைச் செய்யும் நிறுவனங்களைச் சுத்தம் செய்ய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க ருவன்வெலிசாயவில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு கருத்து வெளியிட்ட பொன்சேகா,

"நாட்டில் ஊழல் அரசியல் கலாசாரம் சூழ்ந்துள்ளது. இந்நிலையிலிருந்து விடுபட அனைவரும் சுதந்திரமாகவும், புத்திசாலித்தனமாகவும் செயற்பட்டு கட்சிகளுக்கு அடிமையாகாமல் தேசியத் தலைவர்களிடம் நாட்டை ஒப்படைக்க வேண்டும்.

ஒரே குழு பல்வேறு அரசியல் கட்சிகளை உருவாக்கி மக்களிடம் வந்தாலும் அவர்கள் நாட்டைப் பற்றியோ, நாட்டின் எதிர்காலத்தைப் பற்றியோ சிந்திப்பதில்லை.

ஐக்கிய [illegible] சக்தியின் தலைவ[illegible] களைத் [illegible]

எந்தத் திருடனும் கட்சியில் சேரும் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

முதிர்ச்சியையும் தலைமைத்துவத்தையும் வழங்க முடியாதவர்கள் ஜனாதிபதி வேட்புமனுவுக்குப் பொருத்தமானவர்கள் அல்ல.

பாராளுமன்றத்தில் பெரும்பான்மையானவர்கள் ஊழல்வாதிகள் மற்றும் திருடர்கள், எனவே நிறைவேற்று அதிகாரங்கள் ஒருபோதும் அகற்றப்படக்கூடாது.

நிறைவேற்று அதிகாரம் உள்ள இடத்தில் திருடர்கள் மற்றும் ஊழல்களைக் கட்டுப்படுத்தக்கூடிய சரியான நபரை இருத்த வேண்டும். நிறுவனங்களைச் சுத்தம் செய்ய வேண்டும்" என்றார். (ந-7)

## ஜனாதிபதித்...

முன்னுரிமை வழங்கும்.

இலங்கை மக்கள் தெரிவு செய்யும் எந்த ஜனாதிபதியுடனும் அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்ற இந்தியா தயாராக உள்ளது என இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஸ் ஜா தெரிவித்துள்ளார்.

கண்டியில் பௌத்த மதத் தலைவர்களுடனான சந்திப்பின் பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை மக்களின் தெரிவுகளை மதிப்பது குறித்த இந்தியாவின் உறுதிப்பாட்டையும், இரண்டு நாடுகளில் எவர் ஆட்சி செய்தாலும் வலுவான இருதரப்பு உறவுகளைப் பேணுவது குறித்த உறுதிப்பாட்டையும் அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கை மக்களே தமக்கான அரசதலைவரைத் தெரிவு செய்ய வேண்டியவர்கள், இலங்கை மக்கள் தீர்மானிக்கும் எதனையும் நாங்கள் மதிப்போம்.

இலங்கை மக்கள் தெரிவுசெய்யும் எந்த அரசாங்கத்துடனும் இணைந்து பணியாற்றுவோம், எங்கள் நட்பு என்பது அனைத்து இலங்கைக்கும், அனைத்து இலங்கையர்களுக்குமானது என்றார்.

முன்னதாக இந்தியாவின் சுதந்திர தினத்துக்கு இலங்கையின் அரசியல் தலைவர்கள் [illegible] லைத்

தளங்களில் வாழ்த்துத் தெரிவித்திருந்த நிலையில், இந்திய உயர்ஸ்தானிகரால் சஜித் பிரேமதாஸவின் வாழ்த்துக்கு அதிக கருசனை காட்டப்பட்டிருந்தது.

இது ஜனாதிபதித் தேர்தலில் இந்தியாவின் சார்பு உள்ளதாக விமர்சனக் கருத்துக்கள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## மூன்று நாட்...

போதியளவான முன்பதிவு இல்லாமை காரணமாக இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த கப்பல் போக்குவரத்துத் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் 31 ஆம் திகதி வரையில் இந்த நடைமுறை காணப்படும்.

பயணிகள் வருகை அதிகரிப்பின் அடிப்படையில் எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் நாளாந்தம் இந்தக் கப்பல் சேவையை முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளோம். (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2024.08.20 — சீட்டிழுப்பு இலக்கம் 5571 — O 7 0 3 7 0 3
அத சம்பத — O 3 7 0 3 — சீட்டிழுப்பு இலக்கம் 146

தன நிதானய — திகதி 2024.08.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1601 — W 18 24 47 69 W — Double Chance 62752

மெகா பவர் — திகதி 20/08/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 1919 — L 15 09 28 42 56 — 84582

லக்கி 7 VIP — திகதி 2024.08.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0397 — V 9 3 7 8 4 3 V

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3813 — சீட்டிழுப்பு திகதி 20.08.2024 — V 08 47 70 71 — V 60825

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.08.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0880 — மேஷம் 29 32 34 37 மேஷம் — 58596 — 04

உத்தியோகபூர்வ முடிவுகள் — 20.08.2024 — வெற்றி வாரம் 279 — வர்ணம் சிவப்பு — A 6 3 3 6 0 7 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,419,304.00 — 64646 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2545 — வர்ணம் வெளிர் நீலம் — சீட்டிழுப்பு திகதி 20.08.2024 — தினம் செவ்வாய் — 18 41 57 68 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 52,966,592.00

சனிதா — 2024.08.20 — 4708 — 14 38 48 50 F — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.69,078,774.80 — 96554

சசிரி — 518 — 2024.08.20 — 01 16 49 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,703,080/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4257 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2024.08.20 — தினம் செவ்வாய்க்கிழமை — 04 27 30 52 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.6,303,443.60 — 120746

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — G 40 14 34 36 44 — 1721 — 20.08.2024 செவ்வாய் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 540,058,989.80

அட கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2371 — 2024.08.20 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.60,194,769.60 — 02 12 39 71 Z — 873334


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## தேர்தல்...

ஆணைக்குழு, தீர்மானத்தை வாபஸ் பெற வேண்டும் என தெரிவித்து தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு தொடுக்க இருக்கிறோம் என தேசிய ஜனநாயக முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள அவரது தேர்தல் காரியாலயத்தில் நேற்று (20) நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில்,

தேர்தல் செலவு கண்காணிப்பு சட்டம் ஆரம்பமாக உள்ளூராட்சி மன்ற தேர்தலிலேயே அமுல்படுத்தப்பட இருந்தது. என்றாலும் அந்த தேர்தல் இன்னும் இடம்பெறவில்லை. தற்போது இடம்பெற இருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் இந்த சட்டம் நடைமுறைக்கு வருகிறது.

தேர்தலில் ஒரு வேட்பாளர் எந்தளவு தொகை செலவிடமுடியும் என்பதை நிர்ணயிக்க தேவையான வழிகாட்டலை குறித்த சட்டத்தில் பரிந்துரைத்திருக்கிறோம். வேட்புமனு தாக்கல் செய்து ஒரு வாரத்துக்குள் தேர்தல் ஆணைக்குழு குறித்த வழிகாட்டலின் பிரகாரம் ஒரு வாக்காளருக்காக வேட்பாளர் ஒருவர் எத்தனை ரூபா செலவிட முடியும் என்பதை நிர்ணயிக்க வேண்டும்.

அதன் பிரகாரம் இந்த தேர்தலில் ஒரு வாக்காளருக்கு 20 ரூபா அல்லது அதற்கு நிகரான ஒரு தொகையை நிர்ணயிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் உட்பட 20க்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் இருந்தார்கள். ஆனால் ஐக்கிய மக்கள் சக்தி, பொது ஜன பெரமுன, தேசிய மக்கள் சக்தி போன்ற பிரதான கட்சிகள் 200 ரூபா முதல் 400 ரூபா வரை பரிந்துரைத்தன.

இறுதியில் தேர்தல் ஆணைக்குழு தற்போது ஒரு வாக்களருக்கு வேட்பாளர் ஒருவர் 109 ரூபா செலவிட முடியும் என நிர்ணயித்துள்ளது. இது அசாதாரணமாகும். ஏனெனில் 109 ரூபாவை ஒருஇலட்சத்து 71ஆயிரம் வாக்குகளால் பெருக்கிப்பார்த்தால், 186கோடி ரூபா வரை அமைகிறது.

தேர்தல் ஆணைக்குழுவின் இந்த தீர்மானம், தேர்தல் செலவு கண்காணிப்பு சட்டம் ஊடாக மக்களின் எதிர்பார்ப்பு வீணாகியுள்ளது. ஆணைக்குழுவே இந்த சட்டத்துக்கு பிழையான அர்த்தம் தெரிவித்து, செயற்படுத்தி இருக்கிறது. அதனால் தேர்தல் செலவு தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு எடுத்திருக்கும் தீர்மானத்தை வாபஸ் பெறுமாறு தெரிவித்து, தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு எதிராக அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்ய இருக்கிறோம் என்றார். (ந-7)

WIN REPAIR
உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம், A/C களும் பழுதடைந்து விட்டதா? கவலையை விடுங்கள்.
உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தித் தருகிறோம்.
(1746)
தொடர்புகளுக்கு: 076 834 6136

## தொலைக்...

இலங்கையின் பிரபல தமிழ் தொலைக்காட்சி ஒன்றில் நேற்று இடம்பெற்ற அரசியல் விவாத நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட மலையகத் தமிழ் எம்.பிக்கள் இருவர் விவாத இடைநடுவில் கைகலப்பில் ஈடுபட்ட சம்பவம் அரசியல் அரங்கில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

மலையகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சியான தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பாராளுமன்ற உறுப்பினர்களான பழனி திகாம்பரம் மற்றும் வேலுகுமார் ஆகியோர் இவ்வாறு நிகழ்ச்சியின் இடைநடுவில் மோதிக்கொண்டுள்ளனர்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி, ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கியுள்ள எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்துள்ளது.

எனினும், தமிழ் முற்போக்குக் கூட்டணியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் வேலுகுமார், கட்சியின் தீர்மானத்தை மீறி, தேர்தலில் வேட்பாளராக களமிறங்கியிருக்கும் ரணிலுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்தநிலையில், தமிழ் முற்போக்குக் கூட்டணிக்குள் உள்ளக மோதல்கள் அதிகரித்துள்ள நிலையில், ஒருவர் மாற்றி ஒருவர் பொது வெளிகளில் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்ற நிலையில் நேற்றையதினம் வாய்த்தர்க்கம் கைகலப்பாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-7)



இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த சமுத்திரம், சர்வதேச சூழலியல் விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க பதில் உதவி செயலர் நேற்று இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலிசங்கை சந்தித்து கலந்துரையாடினார். (ந-7)

## உதிர்ந்தது...

இந்த புதிய அரசியல் கட்சியின் மூலம் வேட்பாளர்களை முன்னிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பிரதமர் தினேஷ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் ஆளும் கட்சியின் பிரதம கொரடா பிரசன்ன ரணதுங்க மற்றும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாகக் கருத்து தெரிவித்துவரும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நூற்றுக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

மேலும் புதிய அரசியல் கட்சிக்கு பல பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன. கட்சிக்கான யாப்பு ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ளமையால், எதிர்காலத்தில் அந்த யாப்பின் பிரகாரம் செயற்படுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ந-7)

"குழந்தையின்மைக்கு சிறந்த தீர்வு"
மாபெரும் இலவச கருவளச் சிகிச்சை முகாம்
நீங்கள் நீண்டகாலமாக குழந்தைப் பேறிற்காக காத்திருக்கும் தம்பதியினரா?
நீங்கள் நீண்ட காலமாக அடுத்த குழந்தையை எதிர்பார்த்து காத்திருக்கும் பெற்றோரா?
கருவளச் சிகிச்சையில் புகழ்பெற்ற வைத்திய நிபுணர்களை சந்தித்து ஆலோசனை பெறும் அரிய வாய்ப்பு உங்கள் அனைவருக்கும் கிடைக்கின்றது.
காலம் - 24.08.2024 சனிக்கிழமை
நேரம் - காலை 9.00 மணி - பிற்பகல் 2.00 மணி
இடம் - இணுவில் - மக்லோட் வைத்தியசாலை
ஏற்கனவே முற்பதிவு செய்தவர்களுடன் அனைவரும் பங்குபற்றலாம். கருவளச் சிகிச்சையானது உங்கள் வசதியைக் கருத்திற்க் கொண்டு இணுவில் மக்லோட் வைத்தியசாலையில் மட்டுமே நடைபெறுகின்றது.
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாது பயன் பெற்றுக் கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.



கருவளச் சிகிச்சைக்கு வருவதற்கான பாதை வரைபடம்
077 121 5005, 077 121 5003, 021 224 1569
மக்லோட் வைத்தியசாலை,
கே.கே.எஸ் வீதி, இணுவில்.
(C-10..)

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
ஆகாஸ் நகை மாடம்
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (1749)
076 825 7716 (ஆகாஸ்)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
- சகல நாடுகளுக்குமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை.
- உணவுப் பொருட்கள், மருந்து வகைகள், எண்ணெய் வகைகள், கருவாடு என்பன எம்மூடாக அனுப்பிட முடியும்.
- கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna
208, Galle Road, Colombo - 06
077 755 4528
(276)

வேலையாள் தேவை
யாழ்ப்பாணத்தில் உள்ள பல சரக்கு கடை ஒன்றிற்கு அனுபவம் உள்ள வேலையாள் தேவை.
உணவு, தங்குமிட வசதி இலவசம் சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
(C-1019)
077 983 5705
077 360 3804

இந்தியன் விசா சேவைகள்
யாழ்ப்பாணம் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
அனைத்து நாடுகளுக்குமான விமானப் பயண-சீட்டுக்களினை எம்மிடம் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.
APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (275)

மொத்தக் கொள்வனவு
400g அங்கர் பால்மா மற்றும் யோக்கட் மொத்தக் கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்
Happy Super market
உரும்பிராய்
077 773 0900
(275)

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-1020)
...onal Migration Skills
0777 068 777 / 077 7719 322

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-1020)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.